Registered as a Newspaper in Ceylon

விலை சதம் 10

# ஈழநாடு

EELA NADU

போன்: 389 National Tamil Daily தேசிய தினசரி தபால் பெட்டி எண் 49

| ஈழநாடு சந்தா விபரம் | | |
|---|---|---|
| | இந்தியா — இலங்கை | |
| | வாரப்பதிப்பு உட்பட | வாரப்பதிப்பு மட்டும் |
| 1 வருடம் | 48-00 | 13-00 |
| 6 மாதம் | 25-00 | 6-50 |
| 3 மாதம் | 13-00 | 3-25 |

மலர் 7 யாழ்ப்பாணம் குரோதி மாசி 16 ஆம் நாள் ஷவ்வால் பிறை 24 (27-2 65) சனிக்கிழமை இதழ் 19

யாழ்ப்பாணத்துக்கு

# நகர பஸ் சேவை

## மாநகரசபை மந்திரியிடம் விரைவில் கோரும்

யாழ்ப்பாணம், வெள்ளி

**யாழ்ப்பாணத்தில் நகர பஸ் சேவை ஒன்றை ஆரம்பிக்கவேண்டுமென மாநகரசபை விரைவில் போக்குவரத்து மந்திரியையும், இ. போ. சபையையும் கேட்டுக்கொள்ளவிருக்கிறது. அநேகமாக தேர்தலுக்குப் பின், வருகிற ஏப்ரல் மாதம் இதுசம்பந்தமான முயற்சிகள் மேற்கொள்ளப்படும் என மேயர் திரு. சு. செ. மகாதேவா தெரிவித்தார்.**

தற்போது யாழ்ப்பாணத்தில் இரண்டு நகர பஸ் சேவைகளே நடைபெறுவதாயும்-ஒன்று பருத்தித்துறைக்கும், கச்சேரிக்கும் செல்லும் பஸ்சேவையே அவை என்றும் மேயர் குறிப்பிட்டார்.

யாழ்ப்பாணம் முனிசிபல் எல்லைக்குட்பட்ட நகரத்தின் விஸ்தீரணம் 7 3/4 சதுரமைல். 1962-ம் ஆண்டு மாநகரசபை கணக்கெடுப்படி ஜனத்தொகை 93,547

பருத்தித்துறை வீதி, காங்கேசன்துறை வீதி, பலாலி வீதி உட்பட பல இடங்களுக்கும் சுமார் 25 பாதைகளில் நகர பஸ் சேவை நடத்த வாய்ப்பு இருப்பதாயும் மேயர் கூறினார்

இலங்கையின் 2-வது பெரிய நகரமான யாழ்ப்பாணத்துக்கு வடக்கே நல்லூர் சந்தியும், தெற்கே கடலும், கிழக்கே அரியாலையும், மேற்கே ஒட்டுமடம் சந்தியும் எல்லைகளாக அமைந்துள்ளன.

இலங்கையின் மற்ற முக்கிய நகரங்களில் நடைபெறும் நகர பஸ் சேவையுடன் யாழ்ப்பாணத்து நகர பஸ் சேவையை ஒப்பிடுவதற்கே வழியில்லை என்றும் மேயர் கூறினார்.

## "மாநகரசபை தடையாக இருக்கவில்லை"

### மேயர் விளக்கம்

யாழ்ப்பாணம், வெள்ளி

யாழ்ப்பாணத்தில் புதிய பஸ் நிலையம் ஒன்றை ஆரம்பிக்க மாநகரசபை தடையாய் இருப்பதாக போக்குவரத்து மந்திரி திரு. அனில் முனசிங்கா கூறியிருப்பதை மேயர் திரு. மகாதேவா மறுத்திருக்கிறார். இவ்விஷயத்தில் தடை எதுவும் இல்லையென்றும் ஆனால் பஸ்நிலையத்தை பழைய இடத்திற்கு கொண்டு செல்ல விரும்பினால் நகர சபைக்கு ஏற்பட்ட ரூ 60,000 நஷ்டத்தை கொடுக்க சம்மதித்தபின், சபையின் அனுமதியுடன் இவ் விஷயம் பற்றி ஆலோசிக்கலாம் என்று நாம் கூறியதற்கு பல மாதங்கள் சென்றும் பதில் கிடைக்கவில்லை என மேயர் கூறினர்.

போக்குவரத்து மந்திரி திரு முனசிங்காவோ அல்லது இ. போ. ச. சபையோ இவ்விஷயம் பற்றித் தம்மை அணுகவில்லையென்றும் பிரதேச இ. போ. ச. அதிகாரியே தம்முடன் வந்து பேசியதாயும் மேயர் கூறினர் முன்னர் மேயருடன் தான் இப் பிரச்னை பற்றி அணுகப்பட்டது என்றும், தம்மைப் பொறுத்தவரை பிரயாணிகளின் சௌகரியமே முக்கிய அம்சம் என்றும் அவர் கூறினர்,

## "குழந்தையின் கழுத்தை நெரித்தபின் தலைகீழாக தூக்கிச் சென்றார்"

### கோண்டாவில் சிசுக் கொலை வழக்கில் 15 வயது பெண் சாட்சியம்

யாழ்ப்பாணம், சனி

எனது குழந்தையின் கழுத்தைப் பிடித்து நெரித்தபின் தலைகீழாகப் பிடித்து நீல கால்சட்டையொன்றினால் சுற்றி உமலுக்குள் போட்டு மண்வெட்டியும் எடுத்து தகப்பனார் வெளியில் சென்றார். அவர் திரும்பி வந்ததும், ஏன் என் பிள்ளையைக் கொலை செய்தீர்கள் என்றேன். உடனே அவர் யாரடி உன் பிள்ளையென்று சொன்னது? இப்படியெல்லாம் சொன்னால் வெட்டிப்போடுவேன் என்று கூறினார்.

கோண்டாவில் சிசுக்கொலை வழக்கு நேற்றுக்காலை வடபகுதி அசைஸ் நீதிமன்றத்தில் நீதியரசர் பி. ஸ்ரீஸ்கந்தராஜா முன்னிலையில் இரண்டாவது தினமாக விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட போது, எதிரியின் மகளும், கொலையுண்ட குழந்தையின் தாயுமான 15 வயதுள்ள சரஸ்வதி சாட்சியமளித்த போது மேற்கண்டவாறு கூறினர்,

### குற்றச்சாட்டு

இவ்வழக்கில் கோண்டாவிலைச் சேர்ந்த கதிரன்-செல்லன் என்பவர் அவரது மகள் சரஸ்வதியின் நாமமிடப்படாத குழந்தையைக் கொலை செய்ததாகக் குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

எதிர் தரப்பு வழக்கறிஞர் திரு. எஸ். நாகராசா திரு பாலகுமாரின் அனுசரணையுடன் ஆஜரானர். எதிர்க்காக அரசாங்கத்தால் திரு. தசலையசிங்கம் யோகநாதன நியமிக்கப்பட்டிருந்தார்.

### யாரிடமும் கூறுதே

சரஸ்வதி சாட்சியமளித்த போது கூறியதாவது:-

இருவருடங்களுக்கு முன் என் தாயார் மரணமானர். எனக்கு ஒரு தம்பி, ஒரு அண்ணன், இரு தங்கைகளுண்டு. எல்லோரும் ஒரே வீட்டில் குடிசையில் வசித்து வந்தோம் அக்குடிசைக்கு நான்கு பக்கமும தட்டிகள். அங்கே வயது வந்த வேறு ஆண்கள் இல்லை. தகப்பனர் யாழ்ப்பாண [illegible] சபையில் வேலை பார்த்து வந்தார். காலை 4 மணிக்கு போய் பிற்பகல் 2 மணிக்கு வருவார்.

63-ம் ஆண்டு தைமாதம் ஒருநாள் எனது தகப்பனர் என்னுடன் தகாத முறையில் நடந்து கொண்டார். நான் சத்தமிட்டபோது பேசய்ப் படுத்து விட்டார். காலை எழுந்து வேலைக்கு போகுமுன், என்னிடம் வந்து இதைப்பற்றி யாரிடமும் கூறுதே என்றுவிட்டுப்போனர். வெளிப்படலையையும் கட்டிவிட்டுப் போனர். மற்ற நாளும் அதற்குப் பின் பல இரவுகளும் என்னுடன் தகாத முறையில் நடந்து கொண்டார், 63-ம் ஆண்டு தைமாதம் முதல் 64-ம் ஆண்டு தைமாதம் வரை என்னுடன் தகாத முறையில் நடந்து கொண்டார். நான் சித்திரை மாதம் கருத்தரித்தேன். இதனை தகப்பனரிடம் கூறினேன்.

### குழந்தை பிறந்தது

64-ம் ஆண்டு தைமாதம் 22-ம் திகதி எனக்கு குழந்தை பிறந்தது. அன்றிரவு பிரசவ வேதனைப்பட்டு தகப்பனரிடம் கூறினேன். அவர் ஒருவரிடமும் சொல்லாதே பேசாமல் இரு என்று கூறிவிட்டு வெளியில் சென்று விட்டார். வேதனை காரணமாக எனது சகோதரர்களை ஐயாவைப் பார்த்து வரும்படி அனுப்பினேன். இரவு எட்டுமணிக்கு குழந்தை பிறந்தது. குழந்தை பிறக்குமுன் ஐயா வந்தார்.

(2-ம் பக்கம் பார்க்க)

மாபெரும் கூட்டம்

உடுவில் தொகுதி தமிழ் காங்கிரஸ் அபேட்சகர் திரு ந சிவநேசன் B Sc (Econ). Hons Lond அவர்களை ஆதரித்து இன்று சனிக்கிழமை (27-2 65 மாலை 6 மணிக்கு ஆனைக்கோட்டை மூத்தநயினார் கோயிலுக்கு அருகாமையில் நடைபெறும்.

பிரதம பேச்சாளர்: திரு. ஜி ஜி பொன்னம்பலம் Q C

வடபகுதி அசைஸ்

## பெண்ணின் வேதனையையெண்ணி சாட்சி கண்ணீர் விட்டழுதார்

யாழ்ப்பாணம், வெள்ளி

கோண்டாவில் சிசுக்கொலை வழக்கில் சாட்சியமளித்த வென்னையர் சுப்பையா, பிரசவ வேதனை தாங்காமல் சம்பவம் நடந்தபொழுது பெண் கதறியழுததை நினைத்து கோர்ட்டில கண்ணீர் விட்டு அழுதார் தனது சால்வையால் கண்ணீர்த் துளிகளைத் துடைத்தபடி, அழுதபடியே அவர் சில நிமிடநேரம் சாட்சியமளித்தார்.

எதிரியின் வழக்கறிஞரின் கேள்விக்கு சரஸ்வதியடைந்த வேதனையை நினைத்து அழுவதாகவும், முதல் நாளும், சம்பவம் நடந்ததனமும், குழந்தை பிறந்த சமயமும் சரஸ்வதி வேதனைப் பட்டழுதாரென்றும், அதனால் தனக்கு அனுதாபம் ஏற்பட்டதென்றும் கூறினர்.

மற்றொரு சாட்சியும், எதிரியின் மகனும், சரஸ்வதியின் அண்ணனுமான பிறவி ஊமையின சாட்சியத்தை மொழிபெயர்ப்பதற்கு தொழுவபிரிந்து செவிடர், ஊமை மொழி பெயர்ப்பு நிபுணர் திரு. ஊ.

(6-ம் பக்கம் பாக்க)

## 'ஈழநாடு' சூறாவளி நிதி

### மாத உதவித் திட்டம்

ஈழநாடு சூறாவளிக் கஷ்ட நிவாரண மாத உதவித் திட்டத்துக்கு யாழ்ப்பாணம் நாவலர் வீதியிலுள்ள ஓர் அன்பர் தமது இரண்டாவது தவணைப் பணமான ரூபா 25ஐ உதவியுள்ளார்.

உங்கள் கட்டிடங்கள் உறுதியாக இருப்பதற்கு

திறமான

★ இரும்புச் சாமான்களும்

★ பெயின்டுவகைகளும்

★ அஸ்பஸ் சீட்டுகளும்

★ மர வகைகளும்

எம்மிடம் பெற்றுக் கொள்ளலாம்.

விஷ்ணு

ஹாட்வெயர் ஸ்ரோர்ஸ்

வல்வெட்டித்துறை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வண்ணை வைத்தீஸ்வராலயம் இன்று கொடியேற்றம்

**பாலாம்பிகை சமேத வைத்தீஸ்வர தேவாலய மகோற்சவம் இன்று ஆரம்பமாகிறது. அதையொட்டி இக்கட்டுரை வெளியிடப்படுகிறது.**

### மணிவாக்கு

பிரார்த்தனை நம்முடைய உள்ளத்தின் அந்தரங்கமான அறைகளிலிருந்து எழுந்து வரவேண்டும். அப்பொழுது மாத்திரமே உடனே அது கேட்கப்படும். எல்லோரும் கலந்து ஏகமனத்துடன் பிரார்த்தனை செய்தால் அது பெரிய சக்தியாகும்.

— சுவாமி சிவானந்தர்.


# ஈழநாடு

EELA NADU National Tamil Daily. Post Box: 49, Jaffna. Telegrams: 'EELA NADU' Jaffna Phone: 389.

யாழ்ப்பாணம் குரோதி ஆண்டு மாசி மீ 16 உ (27-2-65)


## பிரதமரின் மறுப்பு

இந்தியாவைத் தாக்குவதற்காக திருக்கோணமலைத் துறைமுகத்தை சீனர்கள் பயன்படுத்துவது சம்பந்தமாக அவர்களுடன் அரசாங்கம் ஓர் ஒப்பந்தம் செய்து விட்டதாக திரு. சி. பி. டி' சில்வா கூறியது பொய்யான, பொறுப்பற்ற பேச்சாகுமென்றும் பிரதமர் ஸ்ரீமா ஒரு மறுப்பு வெளியிட்டுள்ளார். அவர் இவ்விதம் மறுத்துள்ளது வரவேற்கத்தக்கதாகும்.

இந்தியா-சீன எல்லைத் தகராறு துரதிருஷ்ட வசமாக இன்னும் தீரவில்லை. எல்லைகளில் போர் நின்றுள்ளது தான், என்றாலும் அந்தத் தகராறை சுமுகமாகத் தீர்க்க கொழும்பு மகாநாடு கூறிய சமரச யோசனைகளை இந்தியா அப்படியே ஒப்புக் கொண்டு விட்டதென்றாலும், சீனம் அதை ஒப்பவில்லை. அதனால் தகராறு தீராமல், இருநாடுகளும் எல்லைப்புறத்தில் யுத்த முஸ்தீபுகள் செய்து கொண்டுள்ளன. இருதேச உறவுகளும் மோசமாகியுள்ளதுடன், பல பல சந்தேகங்களுக்கும் வதந்திகளுக்கும் இடமேற்பட்டு, கெடுபிடி நிலைமை வளர்ந்து வருகின்றது.

இந்த நிலைமை நீடிப்பது ஆசிய நல்லுறவுக்கோ, அல்லது உலகசமாதானத்துக்கோ நல்லதன்று. இந்தத் தகராறைத் தீர்க்க இலங்கைப் பிரதமர் ஸ்ரீமா இப்போது ஏதும் மேற்கொண்டு முயற்சி எடுத்துள்ளாரா? கொழும்பு மகாநாட்டைக் கூட்ட நல்லதோர் முயற்சி எடுத்த அவர், அந்நோக்கம் பூரண வெற்றியடையும் வரை, இலங்கையின் மேலான நன்மையை முன்னிட்டாவது, இதற்காக வேண்டிய முயற்சிகளை எடுக்கக் கடமைப்பட்டுள்ளார். இதுவரை அவர் இதுபற்றி மௌனம் சாதித்து வருவதன் காரணம் தெரியவில்லை. இது எப்படியாயினும், இப்போது பல பல வதந்திகளும் சந்தேகங்களும் கிளம்பியுள்ளதால், இவற்றை முன்னிட்டாவது அவர் மேற்குறித்த எல்லைப் பிரச்னையைச் சமரசமாகத் தீர்க்கபுதுமுயற்சி எடுக்க வேண்டும். இருநாடுகளுக்கும் பொது நண்பராக இருக்கும் பிரதமர் ஸ்ரீமா இம்முயற்சியை வெற்றிகரமாக எடுப்பின், மேற்குறித்தது போன்ற குற்றச்சாட்டுகளுக்கு அடியோடு இடமில்லை மற்போவதுடன், ஆசிய மக்களுக்கும் உலக சமாதானத்திற்கும் அவர் மேலான கைங்கரியம் செய்ததாகவும் இருக்கும்.

### தலமகிமை

வரம் தரும் வயித்திய நாதனைத் தலத்தில்
வணங்கெழு திருப்பணியதனை
இரந்துமே பிச்சையேற்றுமே செய்வோர்
ஏழ்கடல் சூழுலகினி தாய்ப் புரந்திடும் வேந்தராகவே பிறப்பர்
பூவுலகினில் இருந்திடினும் உரம் பெறு தேவராகுவர் தன்மே
உருத்திர கணங்களாகுவரே

ஈழநாட்டில் உள்ள சிவஸ்தலங்கள் பல. அவற்றினுள் தலம், மூர்த்தி தீர்த்தம் ஆகிய மூன்றும் ஒருங்கே அமையப்பெற்று விளங்குவது வண்ணை வைத்தீஸ்வரன் ஆலயம் ஆகும். இவ் ஆலயம் இற்றைக்கு 176 வருடங்களுக்கு முன் கட்டப் பெற்று இப்பொழுது 8-வது தலைமுறையாக திரு. கந்தப்பச் செட்டியாரினால் பரிபாலனம் செய்யப்பட்டு வருகிறது. இவ் ஆலயத்தில் இருக்கும் மூலமூர்த்தியின் பெயர் ஸ்ரீ வைத்தியநாதர் என்பதாகும். தன்னை அடைந்து வழிபடுவார்க்கு எண்ணிறந்த உடற் பிணியையும் என்றும் நீங்காத பிறவிப் பெரும்பிணியையும் தீர்த்து அருள்புரிந்து வருவதால் ஸ்ரீ வைத்தியநாதர் என்னும் திருநாமம் வழங்கப் பெற்று வருகிறது. என்றும் நீங்காப பேரழகும் இளமையும் பெற்றமையால் அம்மையாருக்கு "பாலாம்பிகை" என்னும் திருநாமம் வழங்கி வருகிறது. இக் கோவிலில் வருடம் இருமுறை உற்சவம் நடைபெறுகிறது. சுவாமி உற்சவம் பங்குனி மாதத்தில் 19 தினங்கள் நடைபெறும். தேவி உற்சவம் ஆடி மாசத்தில் 10 தினங்கள் நடைபெறும். அத்துடன் பிரதோஷ உற்வசம் கார்த்திகை உற்சவம், கந்தஷஷ்டி உற்சவம், நவராத்திரி உற்சவம், ஆவணி மூல உற்சவம், திருவெம்பாவை, திருவாதிரை உற்சவங்களும் சிறப்பாக நடைபெறுகின்றன. இக் கோவிலில் தினமும் ஆறுகால பூசை முறைப்படி நடந்து வருகிறது. திருவனந்தர் ஐந்து மணிக்கும், காலைசந்தி எட்டு மணிக்கும், உச்சிக்காலம் பன்னிரண்டு மணிக்கும், சாயரட்சை ஐந்து மணிக்கும் இரண்டாம் காலம் ஆறு மணிக்கும் அர்த்தசாமம் ஏழு மணிக்கும் குறித்த நேரத்தில் தவறாது நடக்கின்றது. அர்த்தசாமத்தில் வைரவர் பூசை முடிந்த உடன் கொடுக்கும் தீர்த்தம் மிகவும் விசேஷமானது. எந்த நோயாளியும் இத்தீர்த்தத்தைப் பருகினால் தீராத நோய் எல்லாம் தீரும். இக் கோவிலில் மூன்று பிராகாரம் உண்டு, இரண்டாம் பிரகாரத்தில் அம்பாள் சந்நிதானத்துக்கு நேரே, அற்புதமான சித்தாமிர்த கேணி இருக்கிறது. இதில் இரண்டு உற்சவ காலங்களிலும் ஒவ்வொரு மாதப்பிறப்புகளிலும் தீர்த்தோற்சவம் நடைபெறுகிறது. இக் கோவில் உள்ள மூலஸ்தானத்து லிங்கமும் சுற்றுப்பிரகாரத்தில் இருக்கும் ஐந்து லிங்கங்களும் காசி கங்கையில் இருந்து எடுக்கப் பெற்று இங்கு கொண்டு வந்து ஸ்தாபிக்கப் பட்டது. இக்கோவிலில் இருக்கும் தெக்ஷணாமூர்த்தி மண்டபம் தனிச் சிறப்புடையது. இது ஆறுமுக நாவலர் தியானம் செய்த இடமாகும். ஆறுமுக நாவலர் முதலில் பிரசங்கம் செய்த கோவிலும் இதுவே. எல்ல ஆலயங்களையும் டச்சுக்காரர் இடிக்கும் காலத்தில் இக்கோவில் கட்டப்பெற்றது. இக்கோவிலின் ராஜகோபுர வாசலுக்கு எதிரே கட்டிய மண்டபம் தனி சிறப்புடன் விளங்குகின்றது! நவராத்திரி உற்சவத்தில் விஷேச அலங்காரப் பந்தர் அமைத்து ராஜேஸ்வரி அம்பாளுக்கு விஷேச பூசை நடைபெறுகிறது. ஒவ்வொரு வெள்ளிக்கிழமையும் அம்பாளுக்கு விசேஷ உற்சவம் சிறப்பாக நடைபெறுகிறது. இரண்டாம் காலபூசையில் அம்பாள் தனி அழகுடன் இருப்பதைக் காணலாம். இந்தக் கோவில் தர்மகர்த்தா இக்கோவிலின் பெயரால் இந்தியாவில் உள்ள கோவில்களுக்கு காணிகளை வாங்கி கட்டளைகள் நடைபெற்று வருகிறது.

ராமேஸ்வரம், திருவாரூர், திருவையாறு, மதுரை, நாகபட்டணம், பெரியகோவில், வேலூர், சிதம்பரம், பழனி, காசி முதலியன பண்டார சந்நிதி திருக் கூட்டத்தார்க்கு அன்னதானம் வழங்கி வருகின்றன.

பண்ணிய மகிமை நிறை யானந்தப் பெருவொளியே படிவமாகி உன்னரும் மங்களம் நிறைந்து விளங்கி இருந்து எழில் கொழிப்ப உலகுக்கு எல்லாம் அன்னையாய் ஐந்தொழிலுக்கும் வித்தாகி புவனங்கள் அனைத்தும் உய்ய.

மன்று பெருங்கருணை பொழி பாலாம்பிகை மலரடித்தான் வணக்கம் செய்வார்.

### யாழ்ப்பாண பஸ் சர்வீஸ்

யாழ்ப்பாண பஸ் சர்வீஸ் சென்ற சில மாதங்களில் ஓரளவு அபிவிருத்தியடைந்துள்ளது. போக்குவரத்து மந்திரி திரு. அனில் முனசிங்கா பதவி ஏற்றபின் இங்கு 11 இரட்டைத்தட்டு பஸ்களும், 8 ஸ்ரீ பஸ்களும் அனுப்பிவைக்கப்பட்டுள்ளனவாம். அடுத்த வாரத்தில் இன்னும் ஐந்து இரண்டடுக்கு பஸ்களை அனுப்ப ஏற்பாடு செய்வதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

ஆனாலும் இலங்கையின் இரண்டாவது பெரிய நகரமான யாழ்ப்பாணத்திலே நல்ல பஸ் நிலையமோ, நகர பஸ் சேவையோ இல்லாததால் பொதுமக்கள் நாள்தோறும் படும் அவதியைப் பார்க்கலாம். மாநகர சபை ஒத்துழைப்பின் இக்குறைகளையும் தீர்த்து, யாழ்ப்பாண பஸ்சேவையை இலங்கையில் முதல்தரமாக்குவதாக மந்திரி தெரிவித்துள்ளார். இவ்விஷயத்தில் வீண் கௌரவங்களையும் வேற்றுமைகளையும் பாராமல், பொதுமக்களின் மேலான நன்மையை மட்டும் கருதி, மாநகரசபைப் பிரதிநிதிகள், யாழ்ப்பாணத்தின் அபிவிருத்திக்காக ஒத்துழைப்பரென்றே எதிர்பார்க்கப்படுகிறது.

### "குழந்தையின் ..."

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

குழந்தை பிறந்தபோது எல்லோரும் இருந்தார்கள். குழந்தை அழுதுகொண்டிருந்தது நான் நித்திரை. தகப்பனர் வெளியில் போய் சாராயம் கொண்டு வந்தார். கட்டாயப்படுத்தி என்னைச் சாராயம் குடிக்கச் செய்தார் அதன்பின் குழந்தையை தூக்கிச் சென்றார் 1964-ம் தை 24-ல் பொலிசுக்கு வாக்குமூலமளித்தேன் ஆஸ்பத்திரியில் டாக்டர் என்னைப் பரிசோதனை செய்தார்

**மச்சான் வருவதில்லை**

எதிரியின் வழக்கறிஞரால் குறுக்கு விசாரணை செய்யப்பட்டபோது சரஸ்வதி கூறியதாவது: எனக்கு மாமா மருமகன் விவாகம் பேசவில்லை. அந்த விவாகத்தை தகப்பனர் எதிர்க்கவுமில்லை. எனது மச்சான் சண்முகம் எனது வீட்டிற்கு வருவதில்லை. என்னுடன் சண்முகம் தகாதமுறையில் நடந்துகொள்ளவில்லை ஐயாவைத்தவிர வேறு எவரும் என்னுடன் தகாதமுறையில் நடந்துகொள்ளவில்லை எனது வயிறு பெருத்துக் காணப்பட்டது. இது அயலவர் எவருக்கும் தெரியாது அவர்கள் கண்டிருந்தால் அவதானித்திருப்பார்கள். ஆனால் நான் வீட்டிற்கு வெளியில் செல்லவில்லை.

**குழந்தையை தொடவில்லை**

வழ-குழந்தையை நீர் தொடவில்லையா?—இல்லை, தகப்பனர் தொடவேண்டமென்றார்

வழ- ஆஸ்பத்திரியில் நீர் வாறுக்கு சாட்சியளித்தீரா?—ஆம்.

வழ- அப்பொழுது பிள்ளை செத்ததுபோல் கிடந்தது என்றீரா?—ஆம். தகப்பனருக்குப் பயந்து அப்படிக் கூறினேன்.

வழ- மற்றப் பிள்ளைகள் போல் குழந்தை அழவில்லையென்றீரா?—ஆம்.

வழ- தகப்பனர் எழுந்து என்ன செய்தார்?— 'என்ன வெட்கம்' என்று கூறி குழந்தையைத் தூக்கி, ஒரு கையை முகத்திலும் மறுகையை தொண்டையிலும் பிடித்து நெரித்தார். குழந்தை பலமாக அழும்பொழுது அவர் நெரித்துக்கொண்டிருந்தார். கழுத்தை இறுக்கி நெரிக்க குழந்தை கதறியழுதது.

**என்னை வெட்ட வந்தார்.**

வழ- கீழ்க் கோர்டில உமக்கும் சாராயம் தந்து தகப்பனும் குடித்தார் என்றீரா?—இல்லை.

வழ: கீழ்க்கோர்ட்டில் பிள்ளை எங்கே என்று தகப்பனரிடம் கேட்டதாக கூறினீரா? — இல்லை.

வழ: குழந்தையைக் கால் சட்டைக்குள் சுற்றியபொழுது நீரும் இருந்தீர்? — எனது அண்ணனும் இருந்தார். தகப்ப

(6-ம் பக்கம் பார்க்க)

(5-ம் கலத் தொடர்ச்சி)

நாடகங்களை ஒலிபரப்புகிறார்கள், முடிந்தால் கேட்டுப்பாருங்கள்.

* * *

சிவனைத் திசை முகனாய்த் திருமாலாகிச் செழுங் கடலாய்த் தீயாகி நீருமாகிப், புவனாகிப் பவனங்களனைத்துமாகிப் பொன்னாகி மணியாகி முத்துமாகிப், பவனாகிப் பவனங்களனைத்துமாகிப் பசுவேறித் திரிவானோர் பவனாய் நின்ற, தவனாய தலையாலங் காட்டின் தன்னைச் சாராதே சாலநாள் போக்கினேனே.

— அப்பர் சுவாமிகள்.

### ஐயாறன் எழுதுவது

தேர்தல் சோதிடங்களை சாதாரணமாக அப்படியே நம்பமுடியாது: இந்தியாவிலே ஒரு பிரபல அரசியல் சோதிடர், பாகிஸ்தானில் அயூப்கான் வெற்றிபெறமாட்டார் என்றும், பாத்திமா ஜின்னா தான் வெல்லுவாரென்றும், தமது சோதிட சஞ்சிகையில் எழுதியிருந்தார். ஆனல் அந்தச் சோதிடம் பொய்த்தது. அவரது புகழும் சற்று பாதிக்கப்பட்டுவிட்டது. சோதிடர்களையும் கூட கோள்கள் பிடித்து ஆட்டுமல்லவா! காலம் நல்லதாக இருப்பின் அவர்கள் கூறும் சோதிடமும் பலித்து அவர்களது பெரும் புகழும் ஓங்குவதாக இருக்கும் இல்லாவிட்டால் நேர்மாறாக நடக்கக்கூடுமல்லவா!

* * *

கொழும்பிலிருந்து ஒரு தேர்தல் சோதிடம் கிடைத்துள்ளது. கோள்களை அடிப்படையாகக்கொள்ளாமல், அரசியல் சூழ்நிலையைக்கொண்டு கூறப்பட்ட சோதிடம் அது. அதன்படி ஸ்ரீமாவைத் தவிர, அநேகமாக மற்ற அரசியல்கட்சித் தலைவர்களுக்கெல்லாம் இம்முறை போட்டி அதிகமிருக்குமாம்.

1947-ம் வருடம் முதல் பாராளுமன்றத்தில் தொடர்ந்து அங்கம்வகிக்கும் ஐக்கியதேசியக் கட்சி முன்னணியின் ஏகத் தலைவர் ராபார்ட்குணவர்த்தனவின் ஸ்தானத்துக்கு ஆபத்து ஏற்பட்டுள்ளதாம். இங்கு ஐக்கியதேசியக்கட்சி வெற்றி பெறுவது உறுதி என்றும் அந்தச் சோதிடம் தெரிவிக்கிறது.

ஆனல் ஐ. தே. கட்சித் தலைவர் டட்லி சேனநாயகாவின் நிலை டெடிகலமையிலே சென்றமுறையைவிட மோசமாகியுள்ளதாம், 1960-ம் வருடத்தில் அவர் 1760 அதிகப்படியான வாக்குகளால்தான் வெல்ல முடிந்தது. அப்போது அவருடன் போட்டியிட்ட ஓர் அங்கத்தவரும், பத்திரிகைக்காரருமான ரத்ன தேசப் பிரிய சேனநாயகா, இந்த இடைக்காலத்தில் கூட்டுறவு மொத்த விற்பனை ஸ்தாபனத்தின் அதிபராகி தமது செல்வாக்கைப் பலப்படுத்திக்கொண்டிருக்கிறார். டெடிகமையைப் பொறுத்தவரை அவர் அங்குள்ள வேலையில்லாக்கஷ்டத்தையும் தீர்த்துள்ளதாக அரசியல் வட்டாரங்கள் கருதுகின்றனவாம்! சுதந்திரக் கட்சிப் பிரசாரமனைத்தும் இந்தத்தொகுதியில் குவிந்துள்ளதையும், நிலைமையைப் பார்க்கும் போது இங்கு தேர்தல் முடிவு பலருக்கும் ஓர் அதிர்ச்சியைக் கொடுத்தாலும் கொடுக்கலாமென்றும் தெரிவிக்கின்றார்.

ஒரு தொகுதியில் ஐ. தே. கட்சிக்கு சாதகமாகவும், மற்றோர் தொகுதியில் அக்கட்சிக்குப் பாதகமாகவும் அந்தச் சோதிடம் இருப்பதைப் பார்க்கையில், அவர் எந்தப் பக்கமும் சாய்ந்தவரென்று தோன்றவில்லை, டெடிகமையில் எப்படியும் யு. என். பி. தலைவருக்கு மாறாக தேர்தல் முடிவு இருப்பின் அதைவிட பெரிய அதிர்ச்சி இத்தேர்தலில் இருக்கமுடியாது.

* * *

கெலிமடையில் கே. எம். பி. மின்னேரியாவில் வி. பி. டி' சில்வா, எட்டியாந்தோட்டையில் டாக்டர் என். எம்., காலியில் டாக்டர் தகநாயகா, டாக்டர் என். ஏ. விக்கிரமசிங்கா இவர்களுக்கும் எதிர்ப்புகள் கடுமையாக இருப்பதாக அந்த சோதிடம் கூறுகின்றது. என்ன நடக்கிறதோ பார்க்கலாம்!

* * *

ஆகாசவாணி, திருச்சி, சென்னை நிலையங்களிலே சென்ற சில நாட்களாக நாடக விழா நடைபெறுகிறது. இரவு 9-30 மணிக்குநல்ல ருசிகரமான

(4-ம் கலம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தென் கொரிய துருப்புக்கள் சைகோன் வந்து சேர்ந்தன

## வியட்காங்கியருக்கு எதிராக சண்டையில் ஈடுபடும்

### "ஆக்கிரமிப்பை நிறுத்துவதாக ஒப்பினுல் பேச்சு நடத்த முடியும்" — மக்னமாரா

வாஷிங்டன், பெப். 26

வியட்னும் பற்றி பேச்சு வார்த்தை எதுவும் தொடங்குமுன், ஆக்கிரமிப்பை நிறுத்துவதாக வடவியட்னும் ஒப்புக்கொள்ள வேண்டுமென அமெரிக்க வெளிநாட்டு மந்திரி திரு. டீன்ரஸ்க் கூறினுர். அமெரிக்காவைப் பொறுத்தவரை சுதந்திர நாடுகளின் அமைதிக்கும், பாதுகாப்புக்கும் வழி செய்வதே அதன் கொள்கை என்றும் அவர் கூறினுர்.

இவ்விஷயம் வார்ஸாவில் உள்ள சீன தூதரிடம் தெளிவு படுத்தப்பட்டதாயும் அவர் கூறினுர். வடவியட்னும் ஆக்கிரமிப்பை நிறுத்துவதாக ஒப்புக் கொண்டால் அதன் சமபவங்கள் துரிதமாக மாறும் என்றும் அவர் கூறினர்.

எனினும் வெள்ளைமாளிகையிலிருந்து விடுக்கப்பட்ட ஒரு அறிக்கையில் வியட்னுமில் யுத்தம் நிறுத்தும் பற்றி பேச்சு நடத்த ஜனுதிபதி ஜோன்ஸன் எவருக்கும் அதிகாரம் அளிக்கவில்லை எனக் கூறியது.

அமெரிக்கப் பாதுகாப்பு மந்திரி திரு. மக்னமாரா விடுத்த ஒரு அறிக்கையில், தென்வியட்னுமில் அமெரிக்கக் கொள்கை மாறவில்லை என்றும், யுக்தியும் சாதனங்களும் மட்டுமே மாறியிருக்கிறது என்றும் குறிப்பிட்டிருக்கிருர். அவசியமான சமயங்களில் தாக்குதல்கள் மேலும் தீவிரப் படுத்தப்படும் என்றும் அவர் கூறியிருக்கிருர்.

இதற்கிடையில் நேற்று அமெரிக்க போர்விமானங்களும, வெடிகுண்டு விமானங்களும், ஹெலிகோப்டர்களும், வியட்காங்கியரிடம் அகப்பட்டிருக்கும் தென்வியட்னும் துருப்புக்களை விடுவிக்கும் முயற்சியில் இறங்கின.

தென்கொரியத் துருப்புக்களின் முதல் அணி நேற்று தென்வியட்னுமுக்கு வந்து சேர்ந்தது. சைகோனில் தென் வியட்னும் பிரதமர் இத்துருப்புக்களை வரவேற்ருர். சீன, வடவியட்னும், ரஷ்யா ஆகிய நாடுகள் இந்தச் செய்கையைக் கண்டித்துள்ளன.

## எல்லையில் சீன, பாகிஸ்தான் படைபலம் அதிகரிப்பு

### பாதுகாப்பு மந்திரி திரு. சாவன்

புதுடில்லி, பெப். 26

வடக்கு எல்லையில் தற்போதுள்ள சீனப்படைகளின் அளவு, தரம் ஆகியன பெரிய அபாயமாய் இருக்கிறதென பாதுகாப்பு மந்திரி திரு. சாவன் அறிவித்தார். 1962ம் ஆண்டில் இருந்ததைவிட இப்போது அபாயமான அளவில் சீன ஆயுதம் இருந்துவருவதாயும் அவர் கூறினுர்.

அதே சமயம் பாகிஸ்தான், இந்திய எல்லையில் நிச்சயமாகப் படை பலத்தைப் பெருக்கி வருகிறது என்றும், எல்லை நடவடிக்கைகளை அதிகரித்து வருகிறது என்றும் அவர் கூறினுர்.

சீனுவுக்கும், பாகிஸ்தானுக்குமிடையே அரசியல் உறவு நிச்சயம் வளர்ந்துவருகிறது என்றும் அவர் கூறினுர்.

## பார்லிமெண்ட் கட்சி தலைவர்களுடன் மகாநாடு

### சாஸ்திரி அறிவிப்பு

புதுடில்லி, பெப். 26

பார்லிமெண்டிலுள்ள பல்வேறு கட்சித் தலைவர்களுடன் மொழிப்பிரச்னை பற்றி ஒரு மாநாடு கூட்டப்போவதாக பிரதம மந்திரி திரு. சாஸ்திரி தெரிவித்தார்.

முதல் மந்திரிகளின் மகாநாடு ஆலோசனைக்காகவே கூட்டப்பட்டதென்றும், முடிவு எதையும் பார்லிமெண்ட்தான் தீர்க்க வேண்டும் என்றும் அவர் கூறினுர்.

மொழிக் கிளர்ச்சியை அடுத்து மைதானவர்களை விடுவிக்கும் விஷயம் ராஜ்ய அரசாங்கத்தைப் பொறுத்தது என்றும், இவ்விஷயத்தில் தேவையானவற்றை ராஜ்ய அரசாங்கங்கள் மேற்கொள்ளும் என்றும் அவர் தெரிவித்தார்.

---

## ஹரிமன்

புதுடில்லி, பெப். 26

ஜனுதிபதி ஜோன்ஸனின் விசேஷப் பிரதிநிதி திரு ஹரிமன் புதுடில்லி வருகிருர் என அறிவிக்கப்பட்டது.

## எம். ஆர். ஏ. தலைவர் காலமானுர்

லண்டன், பெப். 26

தார்மீகப் புனருத்தாரண இயக்கத் தலைவரான திரு. பீட்டர் ஹோவார்ட் காலமானர். ஸ்தாபகத் தலைவரான திரு. பிராங்க்புக்மன் மரணமானபின், திரு. ஹோவார்ட் இயக்கத்தின் தலைவராக இருந்தார்.

## கொலையுண்டு கிடந்தார்?

கிளிநொச்சி, வெள்ளி

கிளிநொச்சியில் உள்ள கணேஷபுரம் குடியேற்றப் பகுதியில் அமிர்தனுதர் என்பவரின் வீட்டில் இராசன்-பாக்கோப்பு என்னும், 19 வயது இளைஞன் கொலைசெய்யப்பட்டு கிடந்த காரணமாக கிளிநொச்சிப் பொலிசார் [illegible] செய்து சந்தேகத்தின் பேரில் நால்வரை கைதுசெய்துள்ளனர்.

## தாய் பிரதமர் குற்றச்சாட்டு

பாங்காக், பெப். 26

தாய்லாந்தில் கொரில்லா யுத்தம் ஒன்றுக்கு கம்யூனிஸ்ட் சீன ஏற்பாடு செய்துவருவதாய் தாய்லந்து பிரதமர் குற்றஞ்சாட்டியிருக்கிருர்.

---

## உல்பிரைட்

கெய்ரோ, பெப் 26

கிழக்கு ஜெர்மன் அதிபர் திரு. உல்பிரைட் ஜனுதிபதி நாஸருடன் பாலஸ்தீனப் பிரச்னை பற்றிப் பேச்சுவார்த்தை நடத்தினுர்.

---

## கன்சர்வேட்டிவ் தலைவர்

லண்டன், பெப். 26

பிரிட்டிஷ் கன்சர்வேட்டிவ் கட்சியின் தலைவரைத் தெரிவு செய்ய இனி புதிய சம்பிரதாயம் அனுஷ்டிக்கப்படும். பார்லிமெண்டிலுள்ள கன்சர்வேட்டிவ் எம். பி. க்கள் இனி கட்சித் தலைவரைத் தெரிவு செய்வார்கள். இந்த யோசனை தற்போதைய தலைவர் ஸர் டக்ளஸ் ஹியூமினுல் தெரிவிக்கப்பட்டு ஏற்றுக்கொள்ளப் பட்டது.

---

## பாஷையூர் யுனைடெட்டுக்கு வெற்றி

யாழ்ப்பாணம், சனி

பாஷையூர் மக்கள் முன்னேற்றச்சங்க சனசமூக நிலைய யுனைடெட் விளையாட்டுக் கழகத்தினருக்கும் கொண்டாவில மறுமலர்ச்சி விளையாட்டுக் கழகத்தினருக்கும் இடையில் சென்ற வியாழக்கிழமை கொண்டாவில் விளையாட்டு மைதானத்தில் சிநேகபூர்வமாக நடைபெற்ற சரடந்தாட்டப் போட்டியில் பாஷையூர் மக்கள் முன்னேற்றச் சங்க சனசமூக நிலைய யுனைடெட் விளையாட்டுக் கழகத்தினர் இரு ஆட்டங்களிலும் வெற்றிபெற்றனர்.

---

## திங்கட்கிழமை முதல் பாம்பன் சர்விஸ்

புதுடில்லி, பெப். 26

இராமேஸ்வரத்தை பெருநிலத்துடன் இணைக்கும் பாம்பன் பாலம் வருகிற திங்கட்கிழமை மீண்டும் போக்குவரத்திற்காகத் திறந்துவிடப்படுமென ரயில்வே மந்திரி திரு. எஸ். கே. பாட்டீல் அறித்தார்.

---

## சாஸ்திரிக்கு டிட்டோ அழைப்பு

புதுடில்லி, பெப். 26

யூகோஸ்லேவியாவுக்கு வருமாறு ஜனுதிபதி டிட்டோவின் [illegible] விஜயம் செய்திருக்கும் யூகோ. துணைப்பிரதமர் சாஸ்திரியிடம் கொடுத்தது.

## போப்பாண்டவர் பெயரால் உபகாரச் சம்பள ஏற்பாடு

### இந்திய பல்கலைக்கழக மாணவர்களுக்கு உதவி

திருச்சி, பெப். 26

போப்பாண்டவர் பால் பெயரால் நிரந்தரமாகக் கல்வி உபகாரச் சம்பளங்கள் வழங்குவதற்காக, சென்னை, கேரளம், பம்பாய், கல்கத்தா, டில்லி சர்வகலாசாலைகளுக்கு ராஷ்டிரபதி டாக்டர் ராதாகிருஷ்ணன் தலா 10,000 டாலர் விநியோகித்திருக்கிருர்.

இந்த சர்வகலாசாலைகளில் பட்ட வகுப்புகளிலும் பிற்கால வகுப்புகளிலும் சேர்ந்து படிப்பவர்களுக்கு இந்த உபகாரச்சம்பளங்கள் கிடைக்கும்.

சமீபத்தில் போப்பாண்டவர் இந்தியாவுக்கு விஜயம் செய்திருந்தபோது ராஷ்டிரபதியிடம் 50,000 டாலர் கொடுத்து, அவர் இஷ்டப்பட்டவகையில் அதைப் பயன்படுத்துமாறு கேட்டுக் கொண்டிருந்தார். அந்தத் தொகையிலிருந்தே மேற்கூறிய 5 சர்வகலாசாலைகளுக்கும் இந்தப் பணம் விநியோகிக்கப்பட்டது.

ஏழைகளுக்கு இந்த உபகாரச்சம்பளம் கொடுக்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## "தமிழினத்தின் சுதந்திரமே எங்கள் லட்சியம்"

### தமிழரசு பிரசாரக் கூட்டத்தில் திரு. வி. என். நவரத்தினம்

சாவகச்சேரி, வெள்ளி

"தமிழரசுக்கட்சி தமிழினத்தின் விடுதலையையும், விமோசனத்தையும் நிலை சியமாகக் கொண்ட ஒரு கட்சி. கடந்த 14 வருடங்களாக நாம் நடாத்திய போராட்டப்பாதைகள் எப்படியானது என்பதை நாடறியும். எனவே மீண்டும் தொடர்ந்து எமது உரிமைப் போராட்டத்தை நடத்தி தமிழினத்தின் சுதந்திரத்தைப் பெற இத்தேர்தலில் தமிழரசுக் கட்சி அபேட்சகர்கள் அனைவரையும் தேர்ந்தெடுப்பவேண்டியது தமிழ்மக்களின் தலையாய கடமை. அதே சமயத்தில் நாளுக்கொரு கொள்கையோடு தேர்தல் காலத்தில் தோன்றுபவர்கள் தமிழ் மக்களின் முன்னேற்றத்திற்கு வழி வகுக்க முடியுமா என்பதையும் தமிழினம் சிந்தித்துப் பார்க்கவேண்டும்" என்று சாவகச்சேரித் தொகுதி தமிழரசுக் கட்சி அபேட்சகர் திரு. வ. ந. நவரத்தினம் கோயிலாக்கண்டியில் நடைபெற்ற தமிழரசுக்கட்சித் தேர்தல்பிரசாரக் கூட்டமொன்றில் பேசுகையில் கூறினுர்.

திரு. வி. இளையப்பாவின் தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் திரு நவரத்தினம் மேலும் பேசுகையில் கூறியதாவது:

"சிங்கள ஏகாதிபத்தியவாதிகளினுல் தமினத்தை அடக்கி ஆள முயற்சிகள் நடைபெற்றுவரும் இந்தச் சமயத்தில் தமிழினத்தைப் பலவீனப் படுத்தவே தமிழ்க்காங்கிரஸ்காரர்கள் இத்தேர்தலில் போட்டியிடுகின்றனர். இவர்கள் அரசியல் வாழ்வில் மந்திரிப்பதவிகள் பெற்று தமிழ் மக்களை மேலும் மேலும் சிங்களவர்களுக்குக் காட்டிக் கொடுத்துத் தமிழினத்தை அழிப்பதிலேயே முனைந்திருக்கின்றனர்".

திரு அ. க. இராமலிங்கம், திரு. கந்தசாமி ஆச்சாரி உட்பட பலர் பேசினர்.

## தனிப்பட் சூருவளி உதவி நிதிக்கும் வரி விதிப்பு

### அரசாங்கம் நடவடிக்கை

பம்பலப்பிட்டி, வெள்ளி

தனிப்பட்ட முறையில் சூருவளி நிதியை ஆரம்பித்த ஸ்தாபனங்களுக்கு கொடுக்கப்பட்ட நிதி சுற்றில் அங்கீகாரம் பெற்ற தரும ஸ்தாபனங்களுக்கு கொடுக்கப்பட்டாலும் அப்பணத்திற்கு வரி செலுத்தவேண்டும் என்றும் அரசாங்கம் அறிவித்துள்ளது. இந்த முடிவினுல் சூருவளி நிதிக்கு நன்கொடை உதவியவர்கள் கவலை தெரிவித்துள்ளார்கள்.

அரசாங்கம் விடுத்த வேண்டுகோளுக்கிணங்கவே நிதி சேர்த்தவர்கள் நிதியை வழங்க முன்வந்தார்கள் என்றும் அத்துடன் பத்திரிகைகள் சூருவளி நிலைமையை தெளிவுபடுத்தினதாலுமே நாங்கள் பணம் அனுப்பியதாயும் பலர் அபிப்பிராயம் தெரிவித்துள்ளார்கள்.

இந்தப் புயலினுல் பாதிக்கப்பட்டவர்களுக்கு எவ்விதத்தில் நிவாரண உதவி அளிக்கப்பட்டதென்ற முழு விபரங்களை அறிவிக்கும்படி சமூகசேவா அதிகாரி திரு. ஆர். சி. ரணதுங்கா சமூகசேவா சங்கங்களை கேட்டுள்ளார்.

## சாஸ்திரிக்கு கோஸிஜின் கடிதம்

புதுடில்லி, பெப். 26

புதுடில்லியிலுள்ள ரஷ்யத் தூதர் திரு. பெனடிக்டோவ், சோவியத் பிரதமர் கோஸிஜினின் செய்தி ஒன்றை திரு. சாஸ்திரியிடம் ஒப்படைத்தார்.

---

## உண்ணுவிரதம்

கைதடி, வெள்ளி

தமிழ் நாட்டில் தமிழ் உரிமை போரில் உயிர்நீத்த மாணவர்களுக்கு அனுதாபம் செலுத்துமுகமாகவும் ஹிந்தி எதிர்ப்புக்கு ஆதரவளிப்பதற்காகவும் கைதடி கிழக்கு இந்து வாலிபர் சங்க அங்கத்தவர்கள் கடந்த புதன் கிழமை காலை 6 மணியிலிருந்து மாலை 7 மணிவரை கைதடி வீரகத்தி பிள்ளையார் கோயில் முன்றலில் திரு. வ. சி. பொன்னம்பலம் (இந்து வாலிபர் சங்கச் செயலாளர்) தலைமையில் உண்ணுவிரதம் இருந்தனர். இதில் க. இராசையா, வே. விஸ்வநாதர், சி. சுப்பிரமணியம், செ. வேலாயுதம், வே. சின்னையா, ஆ. கந்தையா ஆகியோர் கலந்து கொண்டனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "இன ஒற்றுமைக்கான சகாப்தம் தொடங்கிவிட்டது"

## பருத்தித்துறையில் அனில் பேச்சு

உடுப்பிட்டி, வெள்ளி

"நாம் கூட்டரசாங்கத்தை ஏற்படுத்தியதன் பின்னர் நாட்டின் எந்தப் பகுதிக்கும் பாரபட்சம் காட்டாத நிலையை ஏற்படுத்தவேண்டும் என்று தீர்மானித்தோம், சோணடாவிலே ஓர் புதுவிதமான பஸ் டிப்போவை உருவாக்க முயற்சி செய்வதுடன் யாழ் முனிசிபால்ட்டிக் கருகாமையில் சிறந்த பஸ் நிலையமொன்றும் அமைக்கப்படும். இந்நாட்டில் சிங்களவர்களும் தமிழர்களும் அன்னியோன்யமாக வாழ்வதற்குரிய சகாப்தம் தொடங்கிவிட்டது. கூட்டுஅரசாங்கம் ஆரம்பிக்கப்பட்டு ஒரு வாரத்தின் பின்னர் கனமார்க்கட்டில் நூறு, ஐம்பது ரூபாய் நோட்டுகளைப் பதுக்கிவைத்திருந்தவர்கள் அவற்றைப் பாங்குகளில் போட்டுச் சில்லறைகளாக்கமுயற்சித்தார்கள். இவ்வாறு ஐந்து கோடியே அறுபது லட்சம் ரூபாய்கள் களப்பணமாக வெளிவந்தன. கம்போடியா, எகிப்து, பர்மா, சீனு முதலிய நாடுகளிலிருந்து கொத்து 40 சதமாக அரிசியை இறக்குமதி செய்து கொத்து 25 சதமாகப் பொதுமக்களுக்குத் தருகிறோம். நாம் இந்த அரிசியை 40 சதமாகவிற்றால் 37 கோடி ரூபா இலாபமாகப் பெறமுடியும். இதனாலேற்படும் நஷ்டத்தை இந்நாட்டின் முதலாளிவர்க்கத்திடமிருந்து தான் ஈடுசெய்யவேண்டும் என்று தீர்மானித்தோம். மலைநாட்டுத் தேயிலைத்தோட்ட முதலாளிகளைக் கூடுதலான வரி கட்டும்படி கேட்டோம். 80 லட்சத்திற்கு மேல் பெறுமதிவைத்திருப்பவர்கள் 20 வீத வரியை வருடாவருடம் கட்டவேண்டும் என்று கூறினோம்"

இவ்வாறு போக்குவரத்து அமைச்சர் திரு. அனில்முனசிங்கா பருத்தித்துறை கடற்கரையில் ஐக்கிய இடதுசாரி அபேட்சகா திரு. கே. ரோதிலால் நேருவை ஆதரிக்குமுகமாக நடைபெற்ற கூட்டத்தில் பேசுகையில் கூறினார்.

அவர் தொடர்ந்து கூறியதாவது:-

நான் மந்திரி பதவிக்குவந்து சில நாட்களாக இந்நாட்டின் முதலாளித்துவ பத்திரிகைகள் என்னை இ. போ. ச. வின் புலி யென்றெல்லாம பட்டம் சூட்டிக் கௌரவித்தன. அதே பத்திரிகைகள் தான் இன்று எம்மைத் தூற்றுகின்றன. தமிழர் சிங்களவா என்ற பாகுபாடின்றி இ. போ. ச. ஊழியர்கள் ஒத்துழைத்தமையால் கடந்த வருடத்தில் மாத்திரம் 1,91,00,000 ரூபாய் வருமானம் கிடைத்தது. அந்தத் தொழிலாளர்களுக்கும் ஆளுக்கு 150 ரூபா வீதம் போனசாகக் கொடுத்தோம். அவர்களுக்கு 25 சத வீத பென்ஷன் கொடுக்கவும் ஆயத்தமாகவுள்ளோம். இலங்கைப் போக்குவரத்துச் சபையில் கடமையாற்றும் ஒவ்வொரு தொழிலாளியும் சபையில் தனது அத்தியாவசிய தேவைக்கென 750 ரூபா கடனாக எடுக்க வசதிசெய்யப்பட்டுள்ளது. 27,000 தொழிலாளர்கள் இன்று இ. போ. ச. வினால் தமது வாழ்க்கையை நடத்துகிறார்கள். இவ்வருட முடிவிற்குள் அவர்கள் 80,000 பேராக அதிகரித்துவிடுவார்கள். நாம் இலங்கையிலேயே இன்னும் புதிய பஸ்களை உருவாக்கவிருக்கிறோம். இதனால் 4,000 பேருக்கு வேலை கிடைக்கும். வேலையில்லாத்திண்டாட்டம் நீங்கவும் புதியதோர் இலங்கை உருவாகவும் இந்நாட்டு

# தேரோவின இறுதிச் சடங்குகள்

கண்டி, வெள்ளி

பௌத்த ஆலயத்துக்குச் செல்லும் போது தாக்கப்பட்டு மரணமான வண. புசல பன்ஞானந்த தேரோவின் பூதவுடல் இன்று கண்டியில் உள்ள மத்திய மயானத்தில் தகனஞ் செய்யப்பட்டது. ஏராளமான மக்கள் இறுதிச் சடங்குகளில் பங்குபற்றினர்.

# தேர்தல் வாபஸ்

மஸ்கேலியா, வெள்ளி

மஸ்கேலியா தொகுதியில் சுயேச்சை அபேட்சகராக போட்டியிட நியமனப்பத்திரம் தாக்கல் செய்திருந்த திரு. டி. பி ராஜபக்ச இம்மாதம் 23-ந் திகதியுடன் போட்டியிலிருந்து வாபஸ் பெற்றுக்கொண்டதாக அறிவித்துள்ளார். ஐ. தே. கட்சி ஒரு ஜனநாயக அரசாங்கத்தை அமைக்க வழி செய்யுமுகமாகவேதாம் போட்டியிலிருந்து வாபஸ் பெற்றுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

# காணி மந்திரி மீது சம்மன்ஸ்

கொழும்பு, வெள்ளி

காணி அபிவிருத்தி மந்திரி, நீர்பாசன இலாகா டைரக்டர், கல்விப்பகுதி டைரக்டரர், கேகாலை அரசாங்க அதிபர் ஆகிய நால்வர் மீதும் சுப்ரீம் கோர்ட் சமன்ஸ் பிறப்பித்துள்ளது.

கேகாலையைச் சேர்ந்த வழக்கறிஞர் திரு வின்சன்ட் விக்கிரமசிங்கா தனது வீடு இருக்கும் வளவில் எந்தப்பகுதியையும் மேற் குறிப்பிட்ட நால்வரில் எவருமோ அல்லது அவர்களின் ஏஜண்டுகளில் எவருமோ சுவீகரிக்காதிருக்க கோர்ட் ஆர்டினன்ஸ் மூலம் பாதுகாப்பளிக்குமாறு எச். டபிள்யு ஜயவர்த்தனு கியு சி, மூலம் விண்ணப்பித்திருந்தார். இந்த மனு நேற்று நீதியரசர் சிறிமானே முன்னிலையில் பரிசீலனை செய்யப்பட்ட போது குறிப்பிட்ட நான்குபேர் மீதும் சமன்ஸ பிறக்குமாறும் வழக்கு விசாரணை முடிவடையும்வரை அந்த காணி சம்பந்தமாக எவ்வித நடவடிக்கையும் எடுக்கா திருக்குமாறும் நீதியரசர் உத்தரவிட்டார்.

மனுதார் கல்வி மந்திரியின் அரசியல் எதிரி எனவும், அதன்காரணமாக தனது செல்வாக்கைப் பயன்படுத்தி முன் கூறிய நால்வரையும் இதில் சம்பந்தப் படுத்தி அவரது காணியை சுவீகரிக்க முற்பட்டார் எனவும் வழக்கறிஞர் ஜெயவர்த்தனு தெரிவித்தார்

# என்கோமோவுடன் பிரி. மந்திரி பேச்சு

சாலிஸ்பரி, பெப். 26

பிரிட்டிஷ் காமன்வெல்த் மந்திரி திரு. பொட்டம் லீ, நேற்று சிறைவைக்கப்பட்டிருக்கும் தென்ரொடீஷிய தேசியத் தலைவர் திரு. என்கோமோவைச் சந்தித்துப் பேசினார், இந்தப் பேச்சுக்கள் தமக்கு மிகவும் உபயோகமாய் இருந்ததாக அவர் கூறினார்.

# வாஜெலி அதிபர் காலமானர்

கராச்சி, பெப், 26

பாகிஸ்தான் வாஜெலியின் அதிபர் இன்று காலமானர்.



சுகவீனத்தின்போது


புத்துணர்ச்சி நல்க வல்லது

பார்சிடம்

நிர் 8

ஓடிக் கோலான்

காய்ச்சல் குணமுள்ள புருவத்திற்கு இதமளித்து சுக நித்திரையைத் தூண்டுகின்றது.

கைவசம் ஒரு போத்தலை வைத்திருங்கள்.


இளைஞர்கள் முன்வரவேண்டும்.

இலங்கை சமசமாஜக் கட்சிச் செயலாளர் திரு. லெஸ்லி குணவர்த்தன பேசுகையில், 'யாழ்ப்பாணப் பகுதி மக்கள் இப்பொதுத் தேர்தலில் உள்ள பிரச்னையை இன்னும் முற்றாக உணரவில்லை. முதலாளித்துவத்திற்கும் தொழிலாளர் வர்க்கத்திற்குமிடையே நடைபெறும் உக்கிரமான போராட்டம் தான் இந்தப் பொதுத்தேர்தல் என்பதைப் பொதுமக்கள் உணரவேண்டும். ஸ்ரீமாவோ இடதுசாரிகளுடன் சேர்ந்து புத்தமதத்தை நாசம் செய்கிறார் என்று தென்னிலங்கையில் குற்றஞ்சாட்டுகிறார்கள். பௌத்த மதத்திற்குமாத்திரமன்றி இந்து இஸ்லாமிய, கிறிஸ்தவ சமயங்களுக்கும் கூட்டரசாங்கம் தகுந்த இடமளித்துவந்திருக்கிறது பத்திரிகைச் சுதந்திரம் பறிபோகிறது என்று கூக்குரலிடுகிறார்கள் எல்லாப் பத்திரிகைகளையும் அரசாங்கம் எடுக்கவில்லை என்பதை நீங்கள் உணரவேண்டும். முதலாளித்துவ எண்ணங்களையே பத்திரிகைகள் பிரதிபலிக்கவேண்டும் என்று பிற்போக்குக் கட்சிகள் விரும்புகின்றன. தமக்கு இதுதான் கடைசி தேர்தல் என்பதைப் பிற்போக்கு வாதிகள் நன்கு உணர்ந்தமையினால் சிங்களவர் நாட்டை ஆக்கிரமிக்கிறார்களென்றும் பல இடதுசாரிகள் யு. என். பி. யை ஆதரிக்கிறார்களென்றும் பொய்ப்பிரசாரம் செய்கிறார்கள். பிற்போக்கு சக்திகளை இம்முறை வெல்லவைக்கவேண்டும் என்பதற்காக உள்ளூர் முதலாளிகளைத்தவிர அமெரிக்க ஏகாதிபத்திய வாதிகளும் தமது டாலர்களைச் செலவழிக்கிறார்கள்.

தென்னிலங்கையில் எவ்வாறு யு. என். பி யோ அதே போலவே வட இலங்கையில் தமிழ்க்காங்கிரசும் என்பதைத் தமிழர்கள் உணரவேண்டும். தமிழரசுத் தலைவர்கள் உண்மையாகவே தமிழ் மொழிக்காகப் பாடுபடுபவர்களாக விருந்தால் அவர்கள் ஏன் இன்னும் ஆறு மாதங்கள் வரையும் பொறுத்திருந்து கூட்டு அரசாங்கத்திற்கு ஓர் சந்தர்ப்பத்தை வழங்கியிருக்கக்கூடாது? வேண்டுமென்றே தான் அவர்கள் பிற்போக்கு சக்தியுடன் இணைந்து கூட்டரசாங்கத்தை வீழ்த்தினார்கள் என்று கூறவேண்டியிருக்கிறது. இம்முறை யாழ்ப்பாணப்பகுதியிலிருந்தும் சில இடதுசாரிகளை அனுப்பினால் நிச்சயமாக தமிழ் மக்களின் அரசியல் வரலாற்றில் ஓர் முக்கிய திருப்பம் ஏற்படும் என்று கூறினார்.

திருவாளர்கள் ரே. லோகிலால் நேரு, எஸ். ஜெயசிங்கம் ஆகியோர் ... ளர் கூட்டத்திற்கு திரு. சேனாதிராசா தலைமைவகித்தார்.




குதூகல வாழ்வுக்கு மார்க்கம் நல்ல ஆரோக்கியமே!

இதை அளிக்கிறது

நேத்திராலோகதைலம்

இது பீனிசம், தடிமன், நரம்புவலி போன்றவியாதிகளிலிருந்தும் தலையிலும் கண்களிலும் ஏற்படும் எல்லாவித வருத்தங்களிலிருந்தும் உங்களை பாதுகாக்கிறது.

நேத்திராலோகத் தைலம் கண்களுக்கு இதமளித்து தலைக்கு குளிர்மையளித்து பொடுகு, இளநரை ஆகியவை ஏற்படாமல் தடுத்து கூந்தலை ஆரோக்கியமுடன் நீண்டு வளரச் செய்கிறது.

தினசரி நேத்திராலோக தைலத்தை பாவியுங்கள்.

½ போத்தல் ரூ. 3/- தபால் செலவு சதம் /-65.

வி. பி. பி. ஓடர்கள் ஏற்றுக்கொள்ளப்படும்.

இலவச ஆலோசனைகளுக்கு தினசரி காலை 8-30 மணியிலிருந்து மாலை 4-30 மணிவரை டாக்டர் ஒருவர் இருப்பார்.



★

டப்ளியூ. கே. ஜினதாஸ,

ஆயுர்வேத வைத்தியர்,


161, நோரிஸ் ரோட்,

கொழும்பு-11.



தங்கமுலாம் பூசப்பட்ட கவர்ச்சிகரமான சவரின் வளையல்கள்

...த்துவாரம் உத்தரவாதம் பெற்றவை




உண்மையான தங்கநகைகளுக்கு நிகரானது. அழகிலும் உருவ அமைப்பிலும் சவரின் தங்கநகைகளுக்கு ஒப்பானது. சகல வைபவங்களுக்கும் உபயோகிக்கக்கூடிய வகையில் நவீன உருவ அமைப்புக் கொண்டவை தங்கமுலாம் பூசப்பட்ட சவரின் வளையல்கள் பற்றிய எங்களின் நிபந்தனைகள்:- உத்தரவாதமளிக்கப்பட்ட குறிப்பிட்ட கால எல்லைக்குள், நிறம் மற்றும் சகல வளையல்களும் கட்டணம் எதுவுமின்றி மீண்டும் தங்கம் பூசிக்கொடுக்கப்படும். எங்களால் பொறுப்பேற்கப்படும் ஆடர்கள் வி. பி. பி. யில் அனுப்பிவைக்கப்படும்.

M 43, M 39, M 41. M 36. M 3, M 35
M 37, M 36. M 40, M 46, —
எந்த ஜோடி உருவ, அமைப்புக்கொண்ட ஒரு ஜோடியின் விலை ரூபா 5-00

M 42 ஜோடி ரூ 6-00, M 30 ஜோடி ரூ. 7-00 M31 ஜோடி ரூ 8-50. M 27 ஜோடி ரூ 12-50, M 32 ஜோடி ரூ 12-50, M 49 ஜோடி ரூ 15-00 M 29 ஜோடி ரூ. 15-00 M 47 ஜோடி ரூ 18-50.

ஈ. பிரான்சிஸ் பெரேரா அன்ட் கம்பனி

12, யட்டிநுவர வீதி, கண்டி.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "புதிய இலங்கையை உருவாக்க முயலவேண்டும்"

## இடதுசாரி பிரசாரக்கூட்டம்

உடுப்பிட்டி, வெள்ளி

"இலங்கைப் போக்குவரத்துச்சபைக்கு ஆட்களை எடுத்தபோது நாம் பாரபட்சமின்றி சிங்கள, தமிழ், முஸ்லிம் தொகுதிகளில் ஒவ்வொரு தொகுதியிலும் 12 பேரை நியமான முறையில் நியமித்தோம். இன்னும் புதிய பஸ்களைக் கட்டுவதற்கான தொழிற்சாலைகளை ஆரம்பித்துப் பல ஆயிரம் பேருக்கு வேலை வாய்ப்புகள் வழங்கவிருக்கிறோம். எமது கூட்டரசாங்கம் ஆட்சிக்கு வந்ததும் பதுக்கல் பேர்வழிகள் பலர் விழித்துக்கொண்டனர். அத்தியாவசிய தேவைப் பொருட்கள் யாவும் கொழும்பு நடைபாதையில் பரப்பி விற்கப்பட்டன. கூப்பன் இல்லாமலேயே துணிவகைகள் விற்கப்பட்டன. ஒரு யார் பட்டின் துணி 1 ரூபாய் 90 சதமாக இறங்கியது. அந்நிய ஏகாதிபத்தியம் அழியும் வரையில் நாம் பூரண பொருளாதார சுதந்திரத்தைப்பெறமுடியாது. வெளிநாட்டவர்களுக்குரிய ஏழு வங்கிகளில் இன்று இலங்கையரின் நாலரைக்கோடி ரூபாய் முடங்கிக்கிடக்கிறது."

போக்குவரத்து அமைச்சர் திரு. அனில் முனசிங்க உடுப்பிட்டித்தொகுதி ஐக்கிய இடதுசாரி அபேட்சகர் திரு ஆர் ஆர் தர்மரத்தினத்தை ஆதரித்து முகமாக ரணவாய் முத்துமாரி அம்மன் கோவிலுக்கண்மையில் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் பேசுகையில் கூறினார். மேலும் அவர் தொடர்ந்து பேசியதாவது:-

"வேலையில்லாத் திண்டாட்டப் பிரச்னை தென்னிலங்கையிலுள்ள வாலிபர்களை விட வட இலங்கையிலுள்ளவர்களைத்தான் அதிகமாகப் பாதிக்கிறது. 18 வயது நிரம்பிய தமிழ், சிங்கள இளைஞர்கள் யாவரும் இன மத பாகுபாடுகளை மறந்து புதியதோர் இலங்கையை உருவாக்கப் பாடுபடவேண்டும்.

சமசமாஜக்கட்சிச் செயலாளர் திரு. லெஸ்லி குணவர்த்தன பேசுகையில் "ஒரு ரூபாய் விற்ற பாடப்புத்தகங்களை 2 சதமாக அரசாங்கம் அச்சடித்து விற்பதை முதலாளித்துவ பிரசுரகர்த்தாக்கள் எதிர்க்கிறார்கள் என்றார்.

பருத்தித்துறைத் தொகுதி ஐக்கிய இடதுசாரி அபேட்சகர் திரு மோதிலால்நேரு, திருவாளர்கள் எஸ், ஜெயசிங்கம், ஆர். ஆர். தர்மரத்தினம், பாலசிங்கம், ஆகியோரும்பேசினர், கூட்டத்திற்கு திரு. சுப்ரமணியம் தலைமைவகித்தார்.

## இன்று

சாவகச்சேரி நல்வாழ்வுச் சங்கத்தினரால் சாவகச்சேரி நகர சபைக்கு அருகாமையில் அமைக்கப் பெற்றதும் நகர சபைக்கு அன்பளிப்பாகக் கொடுக்கப்படுவதுமான பாலர் விளையாட்டு உபகரணங்கள் அடங்கிய மைதானம் இன்று சனிக்கிழமை மாலை சாவகச்சேரி மாவட்ட நீதிபதி திரு எம். அப்துல்காதரினால் திறந்து வைக்கப்படும். இவ் வைபவத்தில் வடபகுதி உள்ளூராட்சி உதவி ஆணையாளர் திரு எஸ். சி. மாணிக்கவாசகர் பிரதம விருந்தினராகக் கலந்துகொள்வார்.



REGAL — JAFFNA
NOW SHOWING
Pedro Armendariz
Jacqueline Sassard
in
SONS OF THUNDER
(Technicolor)



ஸ்ரீ மனோகரா (யாழ்ப்பாணம்) போன்: 485
நாகேஸ்வர ராவ் ஸ்ரீ ரஞ்சனி
நடித்த
அரசாளப் பிறந்தவன்
தினசரி 6-30 9-30 சனி ஞாயிறு 2-30, 6-30, 9-30.



இப்பொழுது திரையிடப்படுகிறது!
சிங்ஸ்லி (கொழும்பு) பிளாசா (வெள்ளவத்தை) நவா (கொம்பனித்தெரு)
ராஜ் (நீர்கொழும்பு) விஜயா (மட்டக்களப்பு) விஜிதா (ஹட்டன்)
கல்யாணி (நாவலபிட்டி) மொடேர்ன் (பதுளை) வெலிங்டன் (யாழ்ப்பாணம்)



யாழ்ப்பாணம் வெலிங்டனில்
தினசரி பி. ப 2-30, 6-30, 10-00. சனி, ஞாயிறு காலை 10-30, பி ப 2-30 6-30, 10-00
ஜெமினி கணேசன் - சாவித்திரி (நடித்த)
கற்பகம்


# சோஷலிஸ சக்திகளுடன் ஒத்துழைப்பதால் தமிழர் உரிமை பெறலாம்

## போக்குவரத்து மந்திரி அனில் பேச்சு

மாவிட்டபுரம், வெள்ளி

"மார்ச் 22-ல் நடைபெறும் பொதுத்தேர்தலில் ஸ்ரீமாவோ அரசாங்கம் மீண்டும் பதவிக்கு வந்தால் நாட்டில் நல்ல சோஷலிஸ சமுதாயம் உருவாக முடியும் ஐக்கிய தேசியக் கட்சி பதவி க்குவந்தால் சீனி அரிசி, மா முதலிய பொருட்களின் விலை அதிகரிக்கும். பஸ் சேவை, எண்ணெய் கூட்டுஸ்தாபனம் போன்றவை திரும்பவும் முதலாளிகளின் கைகளுக்கு போகும் இந்நிலையில் நாட்டில்வாழும் இருசமூகத்தினரும் ஒற்றுமையாகவாழவும்நாடு சோஷலிஸ வழியில் முன்னேறவும் மக்கள் இடதுசாரி கூட்டு முன்னணி அபேட்சகர்களை ஆதரித்து கூட்டு அரசாங்கம் பதவிக்குவர வழிவகுக்கவேண்டும்."

நேற்றிரவு குரும்பசிட்டி கிராம முன்னேற்றச் சங்கத்திற்கு முன்னால் உள்ள மைதானத்தில் காங்கேசன்துறை ஐக்கிய இடதுசாரி அபேட்சகர் திரு. கே. வைகுந்தவாசனை ஆதரித்து நடைபெற்ற கூட்டத்தில் பிரதம பேச்சாளராகக் கலந்துகொண்டு பேசிய போக்குவரத்து மந்திரி திரு அனில் முனசிங்க மேற்கண்டவாறு கூறினார்.

திரு. கே. சிவசுப்பிரமணியம் தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் திரு. அனில் முனசிங்க தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது:-

"கடந்த சில வருடங்கள் தமிழர்களாகிய உங்களுக்கு மிகவும் கடுமையான காலமாக இருந்திருக்கும். தமிழர்களின் நிலை எனக்குத் தெளிவாக விளங்குகிறது. இத்தேசத்தில் வாழும் மக்களின் ஐந்தில் நான்கு பங்கினர்கள் சிங்களவர்கள். இலங்கையில் வாழும் தமிழர்களின் பிரச்னை தீரவேண்டுமானால் சிங்கள-தமிழர் ஐக்கியம் வேண்டும். தமிழர்கள் தங்கள் உரிமைகளை இரு வழியில் பெறலாம் ஒன்று சிங்களவருடன் போராடுதல் மூலம், இது சாத்தியப்படாது மற்றது அவர்களுடன் இணைதல் 1956ம் ஆண்டு தனிச்சிங்களச் சட்டத்திற்கு எதிராக சமசமாஜக் கட்சி வாக்களித்தது. அதுநடந்து மூன்று மாதம் கழித்து நான் எனது தொகுதிக்குச் சென்றபோது எனக்குக் கல்லெறியும், ரோட்டில் மரத்துண்டுகள் போட்டுப் பாதையைத் தடைசெய்வதும் பரிசாகக்கிடைத்தன. ஒரு வருடம் கழித்துச் சென்றபோது என்னை பெரிய சுவரொட்டிகள் வரவேற்றன. அவற்றில் என்ன எழுதியிருந்தனவென்றால் அனில் அவர்களே உங்களின் தமிழ் அன்பர்களுடன் சேர்ந்து இந்தியா செல்லுங்கள் என்று எழுதப்பட்டிருந்தது. இந்நிலையில் தமிழர் அரசியலில் முன்னுக்குவருவதாயிருந்தால் சிங்களவர் மத்தியில் அதிக செல்வாக்குப் பெற்றுள்ள ஐக்கிய இடதுசாரியினருடன் சேர்ந்து அரசாங்கத்தை ஆதரிப்பதே.

லங்கா சமசமாஜக்கட்சியும், கம்யூனிஸ்ட் கட்சியும் தென்னிலங்கையில் ஐக்கியத்தை வளர்த்தன. யூ. என். பி.யை எதிர்ப்பதே எங்கள் வேலை. அத்துடன் நாட்டு மக்களை எல்லோரும் சமம் என்று வைத்து நாட்டை சோஷலிஸ பாதையில் முன்னேறச் செல்வதற்காக் கடுமையாக உழைப்போம்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியுடனும், ஐக்கிய தேசியக் கட்சியுடனும் பேரம் பேசலாமென்று தமிழரசுக்கட்சி நினைக்கிறது. ஆனால் இம்முறை அது சரியாகாது. ஏனெனில் பெரும்பான்மை வாக்குகளால் கூட்டரசாங்கத்தினர் திரும்ப [illegible] வருவார்கள்.

திரு. வைகுந்தவாசன் பேசுகையில் கூறியதாவது:-

எதிர்வரும் தேர்தல் மிகவும் முக்கியமானது. இத் தேர்தல் தான் நாட்டில் முதல் வித்துவ ஆட்சிய சோஷலிஸ ஆட்சியா ஏற்படப்போகிறது என்பதைத் தீர்மானிக்கப் போகிறது. இந்நிலையில் தமிழ் மக்களாகிய நாங்கள் வட இலங்கையிலிருந்து ஐக்கிய இடதுசாரி அபேட்சகர்களை தேர்ந்தெடுத்து அனுப்பினால் கூட்டரசாங்கம் திரும்பவும் பதவிக்குவர உதவியாக இருக்கும் அது மட்டுமல்ல நாடு சோஷலிசப் பாதையில் முன்னேறவும் வசதியாக இருக்கும் தமிழரசுக்கட்சியினர்மொழிப் பிரச்னைக்கோ, வேலையில்லாத் திண்டாட்டத்துக்கோ தீர்வுகண்டார்களா?பின் எதற்காக தமிழரசுக் கட்சியினரை அனுப்பவேண்டும் என நான் கேட்க விரும்புகின்றேன்.

மற்றும் பலரும் பேசினர்.

## மகா சிவராத்திரி

யாழ்ப்பாணம், வெள்ளி

திங்கட்கிழமை இரவு கொழும்புத்துறை விநாயகர் ஆலயத்தில் சிவராத்திரியை அனுஷ்டிப்பதற்காக விசேட பூஜைகளும் கதாப்பிரசங்கங்களும், இன்னிசைக் கச்சேரிகளும் நடைபெறுவதற்கு கொழும்புத்துறை இந்துவாலிப சங்கத்தினர் ஒழுங்கு செய்திருக்கின்றனர்.

ஃ ஃ ஃ

திங்கட்கிழமை மாலை 5 மணி முதல் சாந்தையர் மடம் ஸ்ரீ கற்பக விநாயகர் ஆலயத்தில் மகா சிவராத்திரி விழா நடைபெறும். விசேட அபிஷேகம், விசேடபூசை, சமயப்பிரசங்கம், பக்திப்பாடல், பஜனை, சிவராத்திரி புராணபடனம் என்பன நடைபெறும். ஆலய தர்மபரிபாலன சபையார் இவ்வொழுங்குகளைச் செய்துள்ளனர்.

## ஒலிபரப்பு விஷயத்தில் வர்த்தகர்கள் அதிருப்தி

பம்பலப்பிட்டி, வெள்ளி

வர்த்தக ஒலிபரப்புப் பகுதியில் தங்கள் பொருள்களை விளம்பரம் செய்யும் ஸ்தாபனம் தங்களுக்கு திருப்தியான முறையில் நிகழ்ச்சிகளை தயாரித்தால் தான் தாங்கள் தொடர்ந்தும் தங்கள் பொருள்களை விளம்பரப்படுத்த முடியுமென்றும் அப்படி செய்யாவிட்டால் தாங்கள் விளம்பரம் செய்யும் விகிதத்தைக் குறைத்துக் கொள்ளவேண்டி நேரிடும் என்று வர்த்தக ஒலிபரப்பு அதிகாரிக்கு பல ஸ்தாபனங்கள் தெரிவித்துள்ளன.

ஒரு பிரபல சோப்புத் தயாரிக்கும் ஸ்தாபனம் தாங்கள் ஆரம்பிக்கவிருக்கும் 15 நிமிட விளம்பரத்தை உடனடியாகக் கொடாது பின்போட்டுள்ளது. சிறந்த முறையில் விளம்பரங்களை செய்யான திறமைசாலிகள் இல்லாததன் காரணத்தாலேயே இந்த நிலை ஏற்பட் ஏற்பட்டுள்ளதெனத் தெரிகிறது.


SALE

Roasted Rice Flour in one pound Polythene Packets available at wholesale and retail rates Chithra Trades 28, First Cross Street, Jaffna. 1731

விற்பனைக்கு

குறுகிய காலம் பாவித்த 10 H. P லிஸ்டர் டீசல் என்ஜின் ஒன்று விற்பனைக்குண்டு. கரீம் ஹவுஸ், நெல்லியடி, கரவெட்டி. 1787



கேள்வி விளம்பரம்

புதிய குரும்பசிட்டி ஒழுங்கை திருத்த வேலை

மேற்கூறிய வேலைக்கான கேள்விகள் மயிலிட்டி கிராம சபைத்தலைவரால் 13-3-1965ம் திகதி காலை 9 மணி வரைக்கும் ஏற்றுக்கொள்ளப்படும்.

வேலைக்கான கேள்விப்பத்திரச் செலவு ரூபா 5-00 சதமும், வேலைக்கான கேள்விப்பிணை ரூபா 25-00 சதமும்கட்டி மேற்கூறிய வேலைக்குரிய கேள்விப்பத்திரத்தைக் கிராமசபை அலுவலகத்தில் வேலைநேரங்களில், 12-3-1965-ம் திகதி வரைக்கும் பெற்றுக்கொள்ளலாம்.

மேற்கொண்டு இவ்வேலையைப் பற்றிய விபரங்கள் கிராம சபை அலுவலகத்தில் அறிந்து கொள்ளலாம்.

சி. அருணாசலம்,
தலைவர்,
1637 கிராமசபை மயிலிட்டி.

வரி விளம்பரம்

தேவை

நல்ல அனுபவமுள்ள டிரைவர் சாரதி தேவை. நேரில் விண்ணப்பிக்கவும் க. நாகரத்தினம் பிரப்பங்குளம் ஒழுங்கை வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம். 1727

வைத்தியம்

கபால இடிக்கு சந்தன பலாட்சாதி தைலம் பாவியுங்கள். பொ. செல்லையா வைத்தியர், கந்தர்மடம், யாழ்ப்பாணம். 1696

விற்பனைக்கு

யாழ்ப்பாண நகரத்தில் தற்பொழுது விற்பனை நடந்து கொண்டிருக்கும்தேநீர்க்கடையொன்று கையிருப்பில் இருக்கும் சரக்குடன் விற்பனைக்குண்டு. விண்ணப்பிக்கவும் வே செல்லத்துரை 82/1 ஜும்மா மொஸ்க் ஒழுங்கை, யாழ்ப்பாணம். 1733

தையல்

தையல் வகுப்புகள், காலை மாலை. சகலவிதமான தையல் வேலைகளும் ஏற்றுக்கொள்ளப்படும். யாழ் கல்லூரி, பெண்கள் கிளை, 29, பருத்தித்துறை ரோட்டு, யாழ்ப்பாணம். 1725

கல்வி

பெண்கள் மட்டும். தட்டெழுத்து சுருக்கெழுத்து தமிழ் ஆங்கிலத்தில். கணக்குப் பதிவியல், சிங்களம் ஆங்கிலம். ஜி. சி. ஈ. சாதாரணம் கலை, வர்த்தகம் விஞ்ஞானம் மேல்தரம். காலை மாலை வகுப்புகள். யாழ் கல்லூரி, பெண்கள் கிளை, 29, பருத்தித்துறை ரோட்டு, யாழ்ப்பாணம். 1724

விற்பனைக்கு

மாநகரசபை எல்லைக்குள் ஓட்டுமடம் அராலி வீதியில் உள்ள பொம்மை வெளியில் 38 பரப்பும், 11 பரப்பும் கொண்ட இரண்டு வயல் காணிகள் விற்பனைக்குண்டு. ஒருமித்தோ, பகுதி பகுதியாகவோ பெற்றுக் கொள்ளலாம். நேரில் விண்ணப்பிக்கவும். R இராசேந்திரம், 225, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். 1736

தொய்வு, நீரிழிவு

குணப்படுத்த உத்தரவாதம். மந்திரிமார், அரசியல் பிரமுகர்கள் எம்மிடம் சிகிச்சை பெற்ற விபரங்கள் அடங்கிய சுற்றலோக் இலும் தொய்வுக்கு 10 நாள் மருந்து. 12-50 நீரிழிவுக்கு 10 நாள் மருந்து 10-50

வைத்தியர் பரிபூரணானந்தர் கைலாயபிள்ளையார் கோவிலடி, யாழ்ப்பாணம்.


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# பௌத்த சமயத்தை அரசாங்க மதமாக்கலாமா?

## அரசியல் கட்சிகளிடம் கேட்கப்படும்

பம்பலப்பிட்டி, வெள்ளி

பௌத்த அரசாங்க உத்தியோகஸ்தர்களை அங்கத்தவராகக்கொண்டதும் திரு. என். கியு. டயசின் தலைமையில் இயங்குவதுமான பௌத்த சங்கங்கள், பிரதான மூன்று அரசியல் கட்சிகளையும் பௌத்த சமயத்தை அரசாங்க மதமாக்குவதுபற்றி அவர்களுடைய கருத்து என்ன என்று கேட்பதற்குத் தீர்மானித்துள்ளது. ஐக்கிய தேசியக் கட்சி, சுதந்திரக்கட்சி, லங்கா சமசமாஜக் கட்சி(?) ஆகியன... சோஷலிஸ்ட் கட்சி ஆகியன இந்த மூன்று கட்சிகளாகும். இந்த மூன்று கட்சிகளும் தங்கள் தேர்தல் விஞ்ஞாபனத்தில் பௌத்த மதத்திற்கு தகுந்த இடம் கொடுக்கப்படுமென்று கூறியிருப்பதால்— 'தகுந்த இடம் என்ன என்பதற்கு வியாக்கியானம் தரும்படியே இச்சங்கங்கள் கேட்கவிருக்கின்றன. சாசன கமிஷனின் சிபார்சுகள் பற்றி இக்கட்சிகள் நிலை என்ன என்றும் கோரப்படுமாம்.

---

## "குழந்தையின் . . .

(2ம் பக்கத் தொடர்ச்சி)

ரை பிள்ளையை வெளியில் கொண்டுபோனபோது அண்ணனும் சென்றுர்.

வழ: உமது தகப்பனுர் கொடுவாக் கத்தியை எடுத்து வெட்ட வந்தார்? — ஆம்.

வழ: நீதவானுக்கு கத்தியைப் பற்றி ஒருமுறையாவது கூறினீரா? — இல்லை.

வழ: இங்கு சாட்சியமளித்தபோது பிள்ளையைக் கொலை செய்ததாக தகப்பனுரிடம் கேட்டதாக சொன்னீர்? — ஆம்.

வழ: பொலிஸ் வாக்குமூலத்தில் இதைப்பற்றிக்கூறவில்லை? — ஞாபகமில்லை.

### உயிருடன் பிறந்தது

டாக்டர் அருமைநாயகம் ஜயரத்தினம் சாட்சியமளித்தபோது கூறியதாவது:

சிசுவின் உடலை பிரேதபரிசோதனை செய்தேன், காலை 8-30 மணி தொடக்கம் 11 மணிவரை பரிசோதனை செய்தேன். உடலுக்குள் சிசு காணப்பட்டது. நீல நிற காற்சட்டையால் சுற்றப்பட்டிருந்தது சிசு நன்கு வளர்ச்சி நிறைபிருந்தது இது சாதாரண நிறை குழந்தை வளர்ச்சியடைந்திருந்தது. கன்னத்திலும், நாடியிலும் காயம் இருந்தது. பிரேதபரிசோதனைக்கு 48 மணி நேரத்தின் முன் குழந்தை பிறந்திருக்கிறது. குழந்தை உயிருடன் பிறந்தது, நுரையீரல் விரித்திருந்ததாலும், நிறம் காரணமாகவும், பூதக்கண்ணாடியின் பரிசோதனை மூலமாகவும், உயிருடன் குழந்தை பிறந்ததெனக் கூறமுடியும்.

### குழந்தை அழுதது

வேலையர் சுப்பையா சாட்சியமளித்தபோது கூறியதாவது:- எதிரியின் மனைவி இறந்துவிட்டார். சரஸ்வதியை எனக்குத் தெரியும். அவர் எதிரியின் மகள். 1963-ம் ஆண்டு ஆவணி மாதம் சரஸ்வதியின் வயிறு பெருத்துக்காணப்பட்டது. 1964 ஆண்டு தை மாதம் குழந்தையின் அழுகுரல் என் வீட்டுக்குத் தெற்குப்பக்கத்தில் கேட்டது, எதிரியின் வீட்டில் சத்தம்கேட்டது. திகதி ஞாபகமில்லை. சரஸ்வதி அப்போது விவாகம்செய்திருக்கவில்லை. இதுசம்பந்தமாக பொலிசாருக்கு வாக்குமூலமளித்தேன்.

---

## பெண்ணின் : . .

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

எல். சேனநாயகா நேற்றுச் சாட்சியமளித்தார்.

திரு. ஈ. எல். சேனநாயகா கூறியதாவது:-

கடந்த 28 வருடங்களாக நாட்டின் பல பகுதிகளிலுமுள்ள நீதிமன்றங்களில் செனட்டர், ஊமை மொழிபெயர்ப்பாளராகக் கடமையாற்றியுள்ளேன். இதுவரை 800 வழக்குகளில் மொழிபெயர்த்துள்ளேன். 28 சுப்ரீம் நீதிமன்ற வழக்குகளிலும் சாட்சியமளித்துள்ளேன். இதற்காக நான் விசேஷ பயிற்சி பெறவில்லை எனது அனுபவத்தின் மூலமே மொழிபெயர்த்துவருகிறேன்.

1-ம் திகதி திங்கட்கிழமை காலை பிறவி ஊமையான சரஸ்வதியின் தமையன் கோண்டாவில் சிசுக்கொலை வழக்கில் சாட்சியமளிப்பார். திரு. சேனநாயகா மொழிபெயர்ப்பார்.

---

## லட்சாதிபதியாகும் அதிர்ஷ்டசாலி யார்?

பம்பலப்பிட்டி, வெள்ளி

நேற்று இழுக்கப்பட்ட 58-வது கைத்தொழிற் பொருட்காட்சி சுவீப் சீட்டிழுப்பில் முதல் மூன்று பரிசுகள் பெறும் அதிர்ஷ்ட டிக்கட்டுகள் விபரம் வருமாறு-

**முதலாம் பரிசு**

14 Q 0376 ரு 100,000

**இரண்டாம் பரிசு**

20 B 0810 ரு 18 700

**மூன்றும் பரிசு**

06 A 0812 ரு. 6.850

தலா ரூ. 100 பெறும் 100 அதிர்ஷ்ட டிக்கட்டுகள் விபரம் வருமாறு:-

| | |
|---|---|
| 12 S 0466 | 01 M 0204 |
| 10 R 0199 | 11 J 0683 |
| 17 G 0512 | 23 B 0228 |
| 21 C 0894 | 02 B 0259 |
| 11 U 0272 | 13 P 0161 |
| 01 S 0034 | 13 W 0370 |
| 25 P 0066 | 13 V 0756 |
| 05 A 0409 | 05 I 0168 |
| 22 R 0704 | 05 E 0699 |
| 02 H 0220 | 25 I 0421 |
| 11 N 0257 | 02 V 0121 |
| 15 Y 0596 | 17 B 0848 |
| 24 X C653 | 22 G 0629 |
| 24 J 0712 | 11 I 0804 |
| 12 Q 0081 | 24 H 0646 |
| 22 M 0754 | 04 S 0105 |
| 16 I 0410 | 24 S 0780 |
| 10 I 0895 | 19 Y 0293 |
| 02 Z 0645 | 09 E 0953 |
| 14 P 0709 | 07 W 0175 |
| 12 A 0176 | 01 X 0439 |
| 15 F 0902 | 17 E 0260 |
| 17 Y 0123 | 18 V 0168 |
| 16 Y 0754 | 03 X 0341 |
| 22 V 0508 | 23 T 0515 |
| 03 Q 0422 | 21 K 0380 |
| 16 G 0236 | 10 Q 0951 |
| 18 A 0658 | 06 Z 0002 |
| 07 B 0933 | 20 S 0328 |
| 25 F 0787 | 21 S 0169 |
| 06 I 0141 | 18 B 0199 |
| 26 R 0944 | 06 B 0970 |
| 23 H 0522 | 15 Y 0882 |
| 06 E 0543 | 11 J 0581 |
| 23 A 0218 | 16 N 0571 |
| 05 D 0168 | 03 S 0846 |
| 03 I 0475 | 17 W 0510 |
| 21 U 0379 | 24 L 0864 |
| 23 I 0368 | 10 M 0251 |
| 21 G 0380 | 24 Y 0095 |
| 26 Y 0427 | 15 D 0443 |
| 14 P 0578 | 14 J 0862 |
| 25 G 0053 | 01 S 0342 |
| 07 V 0709 | 18 H 0609 |
| 18 T 0570 | 16 N 0137 |
| 17 P 0771 | 15 D 9599 |
| 18 J 0262 | 19 N 0535 |
| 23 K 0904 | 18 Q 0245 |
| 19 K 0740 | 06 E 0683 |
| 16 X 0180 | 03 T 0790 |

---

## மலேசிய பிரச்னை

### தாய்லாந்தின் புதிய யோசனை

லண்டன், பெப். 26

மலேசியாவுக்கும் இந்தோனேஷியாவுக்குமிடையேயுள்ள நெருக்கடியைத் தீர்ப்பதற்கான சமாதானப் பிரேரணை ஒன்றினை தாய்லந்து தெரிவித்துள்ளது.

தாய்லந்து வெளிநாட்டு மந்திரி திரு தனட்கோமான், இந்தோனேஷியா மந்திரி திரு. சுபாண்டிரியோவுடன் நடத்திய பேச்சுக்களின் பின்னரே சமாதானத் தீர்வுபற்றி தாய்லாந்து தூதுவர் இந்த சமாதான உத்தேசத்தை வெளியிட்டிருப்பதாக மலேஷிய அரசாங்கம் அறிவித்துள்ளது. இரு நாடுகளுக்குமிடையேயுள்ள நெருக்கடியைத் தவிர்க்க சமாதானப் பேச்சுக்கள் நடத்தத் தயாராக இருப்பதாகவும் தாய்லாந்து மந்திரி தனட்கோமான் கூறினுர். அவர் மலேஷியப் பிரதமர் துங்கு அப்துல் ரஹ்மானைச் சந்திப்பதற்காக நேற்று மாலை விமானமூலம் மலேசியாவுக்குச் சென்றுர்.

---

## 1000 சட்டவிரோதக் குடியேற்றக்காரர் அனுப்பப்படுவர்

பம்பலப்பிட்டி, வெள்ளி

மன்னூர்ப்பகுதியில் சூறாவளியினால் பாதிக்கப்பட்டவர்களுள் கண்டுபிடிக்கப்பட்ட சுமார் ஆயிரம் சட்டவிரோதக் குடியேற்றக்காரர் விரைவில் இந்தியாவுக்கு அனுப்பப்படுவார்கள்.

---

ஹிந்தி எதிர்ப்புக் கிளர்ச்சியினால்

## இந்திய ரயில்வேக்கு பலகோடி ரூபா நஷ்டம்

புதுடில்லி, பெப். 26

தென்னிந்தியாவில் சமீபத்தில் நடைபெற்ற மொழிக் கிளர்ச்சியின் காரணமாக ரயில்வேப்பகுதிக்கு பலகோடி ரூபாய் நஷ்டமேற்பட்டுள்ளதாக ரயில்வே மந்திரி திரு எம். கே பாட்டீல் ராஜ்ய சபையில் சேத விபரங்களை வெளியிட்டபோது குறிப்பிட்டார்.

இராமேஸ்வரத்தில் கடந்த ஆண்டு டிசம்பர் மாதம் ஏற்பட்ட கடற்கொந்தளிப்பினுல் ஏற்பட்ட சேதத்தைவிட கிளர்ச்சிக்காரரால் ஏற்படுத்தப்பட்ட சேதம் மிகவும் கூடுதலானது என்றும் திரு பட்டீல் தெரிவித்தார்.

14 ரயில்கள் எரிக்கப்பட்டன. ஒவ்வொன்றும் இரண்டு லட்சம் பெறுமானமுள்ள 28 ரயில் பெட்டிகள் நாசமாக்கப்பட்டன. 15 லட்ச ரூபாய் வரை ரயில்வே உபகரணங்கள் நஷ்டத்திற்குள்ளாக்கப்பட்டன. 6 கோடியே 25 லட்சம் ரூபாய் பெறுமானமுள்ள 9 ரயில் பாலங்களும், லெவல் கிராஸிங்குகளும் கிளர்ச்சிக்காரரால் சேதமாக்கப்பட்டன.

---

## அண்ணாதுரை அறிக்கை

சென்னை, பெப். 26

'இந்தியாவிலுள்ள 14 ராஜ்ய மொழிகளும் ஆட்சி மொழியாகக்கூடிய தகுதியை அடையும்வரை ஆங்கிலமே துணைமொழியாகவிருக்கவேண்டும் என முதன் மந்திரிகள் முடிவுசெய்துள்ளனர். 'இதனைப் பொறுத்திருந்து பார்போம்' என திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர் திரு. சி. என். அண்ணாத்துரை வெளியிட்டுள்ள அறிக்கையொன்றில் குறிப்பிட்டுள்ளார்.

---

வட்டுக்கோட்டையில்

## விறகு தட்டுப்பாடு

வட்டுக்கோட்டை, வெள்ளி

வட்டுக்கோட்டை அரசினர் விறகுகாலையில் சுமார் இரண்டு வாரங்களுக்கு மேலாக விறகு இல்லாமையால் இப்பகுதி மக்கள் பெரிதும் கஷ்டமுறுகின்றனர். பிரதேச தகனத்துக்கு விறகுகாலையிலிருந்தே விறகு வாங்குவது வழக்கம். இப்பொழுதுள்ள விறகு தட்டுப்பாட்டால் அதிகவிலைகொடுத்து தனிப்பட்ட வர்த்தகர்களிடம் விறகு வாங்க வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டுள்ளது இரண்டுவாரமாக விறகுகாலை உத்தியோகத்தர் கந்தோருக்கு வந்து வேலை எதுவுமில்லாமல் வீடு திரும்பிக்கொண்டிருக்கிறுர்.

---

## 'அரசியலுக்கு பதில் அறவழி தேவை'

புதுடில்லி வெள்ளி

"இப்பொழுது உலகில் நிலவிவரும் சகல பிரச்னைகளையும் அறவழி மூலம் தீர்க்கலாம், என புதுடில்லியில் அகில உலக சமய மகாநாட்டை ஆரம்பித்து வைத்துப் பேசுகையில் பிரதமர் திரு. லால்பகதூர் சாஸ்திரி தெரிவித்தார். "உலக மக்களை அல்லோல கல்லோலப் படுத்தி அச்சமடையவைக்கும் பெரும் பிரச்னைகளையும் மற்றும் சகல பிரச்னைகளையும் அறவழியில் நிச்சயம் தீர்க்கலாம். இந்த பிரச்னைகளை அரசியல் முறையில் அணுகுவதைவிட அறநெறி வழியில் அணுகினுல் சகல பிரச்னைகளும் சுமுகமாக தீர்ந்துவிடும்" என்றும் திரு சாஸ்திரி குறிப்பிட்டார்.

---

## சீனஸ்தானிகர் இலங்கை வந்தார்

பம்பலப்பிட்டி, வெள்ளி

இலங்கையிலுள்ள சீனஸ்தானிகர் ஷெய் கி-ஷி நேற்று விமானம் மூலம் இலங்கை வந்துசேர்ந்தார்.

இவருடன் வேறு இரு சீனப் பிரமுகர்களும் வந்தனர்

ஒரு சீனராஜதந்திர தூதுவர் கட்டுநாயக்கா விமானநிலையத்தில் இவரை வரவேற்ருர்.

---

## சமாதான நீதவான்

காரைநகர், வெள்ளி

காரைநகர் கிராமசபைத் தலைவர் திரு. கா. க. சிவலிங்கம் ஊர்காவற்றுறை பொலிஸ் நீதிபதி இராசரத்தினம் முன்பாக சமாதான நீதவானாக பிரமாணம் எடுத்துக்கொண்டார்.

---

## இன்று

வண்ணை ஸ்ரீ வைத்தீஸ்வரன் கோவில் பஞ்சோற்சவம் இன்று காலை 8-30 மணிக்கு பஞ்சமுர்த்திகள் பூஜை. காலை 9-15க்கு துவஜ ரோகணம் ஆகியவற்றுடன் ஆரம்பமாகிறது. மாலை 6-00 மணிக்கு ஸ்ரீ சி. எஸ். எஸ். மணிபாகவதர் இராமாயண பிரசங்கத் தொடரில் "மந்தரை சூழ்ச்சி" என்னும் பொருள்பற்றி சங்கீத கதாப்பிரசங்கம் நிகழ்த்துவார்.

---

## விமான சேவை

பம்பலப்பிட்டி, வெள்ளி

கொழும்பு-பொலன்னறுவ விமானச்சேவை இன்று ஆரம்பிக்கப்பட்டது. இச்சேவை வாரத்தில் திங்கள், சனிக்கிழமைகளில் மட்டுமே நடைபெறும்.

---

## 'ஈழநாடு' சூறவளி கஷ்ட நிவாரண நிதி

'ஈழநாடு' சூறாவளி கஷ்ட நிவாரண நிதிக்கு பணமாகவும், பொருளாகவும் மொத்தம் 26,820 ரூபா 21 சதம் சேர்ந்துள்ளது.

நேற்று கிடைத்த வசூல் விபரம் வருமாறு:-

டாக்டர் ஏ. சிவலிங்கம், 26, வார்ட்பிளேஸ், கொழும்பு- 50-00.

---

## சீன உதவிமந்திரி இங்கு விஜயம்

பம்பலப்பிட்டி, வெள்ளி

சீன உதவி மந்திரி திரு. லியூ ஹெசின் சூபன் இலங்கைக்கு விஜயம்செய்யலாமென எதிர்பார்க்கப்படுகிறது. இவருடன் வேறு சில அதிகாரிகளும் வருவார்கள்.

---

வவுனியா, வெள்ளி

வருகிற திங்கட்கிழமை மகா சிவராத்திரியை முன்னிட்டு காலை 10 மணி தொடக்கம் விசேஷ பூசைகளும் சிவராத்திரி புராணபடனமும் பஜனைகளும் மேளக்கச்சேரியும் வவுனியா கந்தசாமி கோவிலில் நடைபெறும்.

---


**மாபெரும்கூட்டம்**

பாரிஸ்டர்

**எம். சிவானந்தன்**

அவர்களை ஆதரித்து

கைதடிச் சந்திக்கு அருகில்

இன்றுமாலை 6 மணிக்கு

முக்கிய பேச்சாளர்கள்:

திரு. ஜி ஜி. பொன்னம்பலம்

திரு. வி. குமாரசாமி

திரு. எம். சிவசிதம்பரம்


இப்பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் ஸ்தாபனத்தினருக்காக யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேலை வீதி 68-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1965-ம் ஆண்டு பெப்ரவரி மாதம் 27-ம் திகதி அச்சிட்டுவெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org